709

தொகுதி 10.] 1931ஞு ஏப்ரல்மீ 1வ [பகுதி 3.

மனமோகினி.

ஆசிரியர்
ஆரணி.குப்புசாமிமுதலியார்

8 MAY 1931

பிரசுரகர்த்தர்
நா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலயம், சென்னை.

மாதவி மாதவன் 2-பாகம்

ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவாக கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

இரத்தினபுரி ரகசியம் 4-பாகம் விலை ரூபா 8-4-0

அமராவதி 2-ரூபா.

ஆரணி-குப்புசாமி முதலியாரவர்களியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனுயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட் டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

இராஜாமணி

அல்லது

ஓர் அபூர்வ மர்மம்

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்த தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு முரடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம்பிள்ளை யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி அவரை மணந்துகொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயும் படிப்போர் மனத்தைக் கவரக்கூடியதாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

8-MAY 1931

அதைப் பெற்றுக்கொண்ட இரங்கம்மாள் அதைப் படித்துப் பார்த்து, "பெரியநாயகிச் சீமாட்டி" என்று இருந்ததைக் கண்டு உடனே இளவரசி பக்கமாகத் திரும்பி மெதுவான குரலில், "இம்மாது இங்கு இருப்பதற்கு அருகதையுடையவளல்ல. நமது இளவரசர் மாளிகையில் நடைபெற்ற பல நாடகங்களில் இவளும் கலந்துகொண்டவளென்பதை இவளது பெயரால் தங்களுக்கு ஞாபகம் வரலாம்," என்று கூறினாள். அதைக்கேட்ட இளவரசி, "ஆம், எனக்கு ஞாபகமிருக்கிறது. அம்மாளிகைக்குச் செல்லும் பல மாதர்களின் பெயர்களில் பெரியநாயகிச் சீமாட்டி என்னும் பெயரும் காணப்பட்டது. ஆனால் இதே பெயரையுடையவள் ஒருத்தி இராணியின் மாளிகையில் வேலையில் இருந்தாள் அல்லவா?" என்று யோசித்தாள். அதற்கு இரங்கம்மாள் "இருக்கலாம்; ஆனால் இம்மாது தங்கள் விரோதிகளுடைய கூட்டத்திலிருந்துதான் வருகிறாள்," என்று நிச்சயமாய்க் கூறுபவள் போல் சொன்னாள்.

அச்சமயத்தில் அங்கே நின்றிருந்த அம்புஜம் சிறிது குனிந்து இளவரசியிடம், "இம்மாது இப்போது ராணியின் மாளிகையிலும் வேலைக்கு இல்லையென்று தெரிகிறது. அவள் ராஜிநாமா செய்துவிட்டதாக நான் பத்திரிகையில் படித்திருக்கிறேன்," என்று கூறினாள். உடனே இரங்கம்மாளும் அதற்கனுசரணையாக, "ஆம்; நானும் அப்படித்தான் நினைக்கிறேன். அவள் கலியாணம் செய்துகொண்டிராவிட்டாலும், புருஷருடன்கூடி வாழ்ந்தவள்போலவே காணப்படுகிறாள்," என்று கூறினாள். அதைக்கேட்ட இளவரசியும் பெரியநாயகிச் சீமாட்டியைப் பார்த்துக்கொண்டே, "ஆம்; அவள் விவாகம் செய்துகொண்டிருக்கவேண்டும். இல்லையென்றாலும் இளவரசரின் மாளிகைக்கு வரும் மாதர்களுக்கு ஆடவர்கள் அகப்படுவது கஷ்டம்" என்று கூறினாள்.

186556
சென்னை-600 008

அவர்கள் அவ்வாறு மெதுவாக எதை எதையோ பேசுவதையும், இடை இடையே தன்னை நோக்குவதையும் கண்டு பெரியநாயகிச் சீமாட்டி அவர்கள் அவளைப்பற்றியே எதுவோ பேசிக்கொள்கிறார்களென்பதையும், அதுவும் இரத்தினபுரியில் அவளைப்பற்றி என்ன புகார் கிளம்பியிருக்குமோ அதைப்பற்றித்தான் பேசிக்கொள்வார்களென்பதையும் உணர்ந்தாள். மேலும் அவள் எவ்வளவுதான் மூடி வைத்தாலும் அவள் விதவைக் கோலத்துடன் இருந்தும் கர்ப்பவதியாய் இருக்கிறாள் என்பதும் தெரிந்துவிடுகிறபடியாலும் அவள் உண்மையிலேயே சிறிது வெட்கமடைந்தாள். பெரியநாயகிச் சீமாட்டி தான் கர்ப்பவதி என்பதை வெளிக்காட்டாது மறைத்தாளென்றாலும் இரங்கம்மாள் இதில் அனுபவ பூர்வமாகத் தேர்ச்சி பெற்றவளாதலின் அதை யூகித்தறிந்து கொண்டுவிட்டாள்.

எனினும் பெரியநாயகிச் சீமாட்டி தைரியம் செய்து கொண்டு இளவரசியைப் பார்த்து, "என் பெயர் சொன்னால் நான் வந்த காரியவிஷயத்திலும் அபவாதம் ஏற்பட்டுவிடுமே என்னும் அச்சத்தால்தான் என் பெயரைச்சொல்ல மறுத்தேன். எனினும் இக்கடிதத்தைத் தாங்கள் படித்துவிட்டால் சந்தேகங்களெல்லாம் நிவர்த்தியாய்விடும். இது தங்கள் மைத்துனி சுந்தராங்கிச் சீமாட்டியாரால் எழுதப்பட்டது;" என்று கூறினாள். அப்போது இரங்கம்மாள் அதிக கோபத்துடன், "பெரியநாயகிச் சீமாட்டியே! நீ உன் விஷயத்தை மறைத்துக்கொள்ள வேண்டியவளாயிருந்தும் இவ்வாறு தைரியத்துடன் இளவரசியின்முன் வரலாகாது. இப்போது இங்கிருந்து விலகுவதே நல்லது" என்று கூறினாள். இவர்கள் இவ்வாறு சொற்போரிடுவதைக் கேட்ட இளவரசியும் என்னசெய்வதென்று தோன்றாமல் பெரியநாயகிச்

சீமாட்டியைக் கண்டு, அக்கடிதத்தை என்னிடம் கொடுத்து விட்டு நீ இவ்விடத்தைவிட்டுப் போய்விடு" என்று கூறினாள்.

இரத்தினபுரி இளவரசி தன்னிடம் கடிதம் கொடுத்து விட்டுப் போய்விடும்படி கட்டளையிட்டதைக் கேட்டதும் பெரியநாயகிச் சீமாட்டி சந்தோஷமடைந்து தான் கொண்டு வந்திருந்த கடிதத்தை இளவரசியிடம் கொடுத்துவிட்டு மிக அவசரமாகத் திரும்பிச்சென்றாள். ஆனால் அவ்வாறு போகும் போது திரும்பிப் பார்த்துக்கொண்டே சென்றதில் தான் கொடுத்த கடிதத்தைப் பிரித்து இளவரசி படித்துக்கொண்டிருப்பதைக் கண்டு உள்ளம் மகிழ்ந்தாள். தான் எடுத்த காரியம் பலவகை சிரமத்துக்குள்ளேனும் முடிந்துவிட்டது பற்றி சந்தோஷமடைந்தாள். இவ்வாறு அவளடைந்த சந்தோஷத்தில் சொற்ப நேரத்துக்குமுன் அவள் அடைந்த அவமானத்தையும், கௌரவக் குறைவையும் மறந்துவிட்டாள்.

இப்போது நாம் இளவரசியும் தோழிகளும் என்ன செய்கிறார்களென்பதைக் கவனிப்போம். இளவரசி பெரிய நாயகிச் சீமாட்டியிடமிருந்து கடிதத்தைப் பெற்றதும் அந்த உறையைக் கிழித்து அதிலுள்ள கடிதத்தை எடுத்துக்கொண்டு உறையைக் கீழே போட்டுவிட்டாள். அவள் கீழே போட்ட அவ்வுறையை சகோதரிகளில் மூத்தவளாகிய இரங்கம்மாள் அதை எடுத்து அலட்சியமாக மடிப்பவள் போல் மடித்து வைத்துக்கொண்டாள். இளவரசியோ தான் பிரித்த கடிதத்தைப் பார்த்தாள். அது அத்தை சுந்தராங்கியால் எழுதப்பட்டிருந்தது. அதில் பின்வருமாறு காணப்பட்டது.

இரத்தினபுரி அரசமாளிகை
டிசம்பர் 1814.

"எனது அன்புள்ள மைத்துனியே! இக்கடிதத்தைக் கொண்டுவரும் கனவானை நீ அவசியம் நேரில் சந்திக்கவேண்டும். அப்போது அவர் என்ன காரணத்தால் உன்னைச் சந்திக்க விரும்புகிறார் என்பதை விவரித்துக் கூறுவார். அவர் ஜகதீசன் என்னும் பெயரையுடையவர். அவர் உன்னைப் பார்க்கமுடியாதபடி தடுக்க உன் அருகிலேயே இருக்கும் பலர் முயற்சி செய்வார்கள். யார் என்னசெய்தாலும் நீ மட்டும் அவனைப் பார்க்கத் தவறவேண்டாம். உன் சொந்த நன்மையையும் உன் மகள் நன்மையையும் உத்தேசித்தேனும் அவரைக் காணவேண்டியது அவசியமாகும். அவரைப் பார்க்கவேண்டாமென உன்னைப் பலர் தடுப்பார்கள் என்பதை நான் அறிவேன். நீ அப்படிப்பட்டவர்களின் வார்த்தைகளைப் பொருட்படுத்தாதே. அவரைப் பார்த்து அவர் சொல்வதைக் கேட்டு அதன்படி நடக்கவேண்டியது மிக அவசியமான வேலை யாகும் என்று உறுதி கூறுகிறேன்.

இப்படிக்கு,
உன் அன்புள்ள சுந்தராங்கி"

இளவரசியின் பின்புறத்தில் நின்றுகொண்டிருந்த ஜானகியும் அம்புஜமும் ஒன்றும் தெரியாதவர்களைப்போல் நின்றிருந்தாலும் மெதுவாக இளவரசி படித்த கடிதத்தில் என்ன எழுதப்பட்டிருக்கிறதென்பதை அறிந்துகொள்ளத் தவறவில்லை. அவர்கள் அவ்வாறு திருட்டுத்தனமாகப் படித்தார்களென்பதை அவர்கள் பக்கத்திலிருந்த பலராமனும் அறிந்துகொள்ளவில்லை. இளவரசியின் பக்கத்தில் நின்றிருந்த இரங்கம்மாளோ, கீழே போடப்பட்ட உறையை அலட்சியமாக மடிப்பவள்போல் மடித்தாலும் அதைப் பத்திரப்படுத்

தித் தன் இடுப்பில் வைத்துக்கொள்வதில் மிக்க கவனத்தைச் செலுத்தினாள்.

இளவரசி கடிதத்தைப் படித்து முடித்த பின்னர், "ஓ, இது ஒரு ஆச்சரியமான, முக்கிய கடிதமாக இருக்கிறது. எனதன்புள்ள தோழி இதை நீயும் படித்துப்பார். பெரிய நாயகிச் சீமாட்டியிடம் நீ அவ்வாறு நடந்துகொண்டதற் கெல்லாம் என் அந்தஸ்தின் கௌரவத்தைக் காப்பாற்றவேண் டும் என்பதற்காகத்தானே; ஆதலின் அவ்விஷயத்தில் எனக் குச் சந்தோஷமே. ஆனால் ஜகதீசனுடைய இக்கடிதத்தை இவள் எப்படி எடுத்துக்கொண்டு வந்தாள் என்பது விளங்க வில்லையே. என் மைத்துனி தன் சமாசாரத்தை அனுப்ப நல்ல ஆளைக் கண்டுபிடித்தாள். ஜகதீசன் என்பது யார்? அந்தப் பெயரையும் நான் கேட்டதில்லையே" என்று கூறிக் கொண்டே அக்கடிதத்தை இரங்கம்மாளிடம் கொடுத்தாள்.

அப்போது இரங்கம்மாள், "இளவரசியே" எங்களுடன் வந்திருக்கும் இராஜம்மாள் தங்களிடம் ஜகதீசனைப்பற்றிச் சொன்னதை மறந்துவிட்டீர்களோ? நாங்கள் இரத்தினபுரியி லிருந்து பாஞ்சாலதேசம் புறப்பட்டபோது எங்களுடன் அவனும் வந்தானென்றும், நாங்கள் அவன் பெரியமனுஷனு யிருப்பானென எண்ணியதில் அவன் கேவலமாக நடந்து கொண்டதையும் இராஜம்மாள் உங்களிடம் சொல்லவில் லையா? அம்புஜமும் விவரமாகக் கூறுவாள்" என்றாள்.

அம்புஜம்.—ஆம்; சொன்னது ஞாபகமிருக்கிறது. ஆனால் அவன் எங்களுடன் வந்தபோது வழியில் சிறை செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டு மிகக் கஷ்டப்பட்டா னல்லவா? அவன் மாறுபெயருடன் திரிந்ததாலும், சந்தேகப்படத்தக்க குணங்களுடையவன்போல் காணப் பட்டதாலும் தானே அவனைச் சிறையிலடைத்தார்கள்?

ஜானகி:—ஆம்; நானும் அவனைப்பற்றிப் பயங்கரமான பல சங்கதிகளைக் கேள்விப்பட்டேன். அவன் நம்பத்தக்கவனென்றோ, பெரிய மனிதனென்றோ கூறமுடியாது.

இச்சகோதரிகள் மூவரும் ஒருவர்பின் ஒருவராக அம் மனிதனைப்பற்றிக் கேவலமாகப் பேசுவதைக் கண்ட இளவரசி, "எனதன்புள்ள தோழிகளே! நீங்கள் என் இவ்வளவு கவலைப்படுகிறீர்கள். அந்த ஆள் சமீபத்தில் என்னை வந்து காண்பார் எனச் சொல்லமுடியவில்லை. ஆதலின் அமைதியாக இருங்கள். அவனே என்னிடம் நேரில் கொடுக்க வேண்டுமென்று கூறப்பட்டிருக்கும் இக்கடிதத்தை பெரிய நாயகிச் சீமாட்டி எடுத்துவர நேர்ந்த மர்மந்தான் எனக்கு விளங்கவில்லை" என்று கூறினாள்.

அப்போது இரங்கம்மாள், "விளங்கவில்லைதான், ஆயினும் இந்தப் பெரியநாயகிச் சீமாட்டி என்பவள் அந்த ஜகதீசனுடைய கள்ளக் காதலியாக இருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. அவன் தங்கள் மைத்துனி சுந்தராங்கி அம்மாளை எப்படியோ ஏமாற்றி அவரிடமிருந்து இக்கடிதத்தை வாங்கிக்கொண்டு வந்திருக்கிறான் என்பதை நீங்கள் நிச்சயமாக நம்பவேண்டும். உங்களை எப்படியாவது நேரில் காண்பதற்காக அவன் இச்சூழ்ச்சியைச் செய்திருக்கிறான்" என்று சொன்னாள்.

அப்போது இளவரசி, "இதில் ஏதோ விசேஷமிருக்கிறதென்பதில் சந்தேகமில்லை. என்ன செய்வதென்று எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. நான் கேள்விப்பட்ட பல விஷயங்களிலிருந்து ஜகதீசன் விஷயமாக நல்லெண்ணம் உண்டாகவில்லை. ஆனாலும் என் மைத்துனியின் கடிதமோ அவனைப் பார்க்கத் தவறலாகாதென்றும், யார் என்னசொன்னாலும் அதைப் பொருட்படுத்தலாகாதென்றும் வற்புறுத்து

கிறது. இவ்விஷயத்தில் எனது காரியஸ்தர் பலராமருடைய அபிப்பிராயம் யாதோ?" என்று கேட்டாள்.

அதுவரை பலராமன் அங்கு நடந்துவந்த எல்லா விஷயங்களையும் வாய் திறவாமல் கவனித்துவந்தான். எப்போதுமே அவனுடைய வழக்கம் அதுவே. அவனாக எந்த விஷயத்திலும் ஈடுபடுவதில்லை. இளவரசியோடும், அவளாகக் கேட்பதற்குமுன் எதுவும் பேசமாட்டான். அவளுடன் தனித்தும் இருக்கமாட்டான். இப்போது இளவரசியாக முன்வந்து இவ்விஷயத்தில் அவனுடைய அபிப்பிராய மென்ன வென்று கேட்டதால், "இளவரசியே! எப்போதும் நான் என் மனதில் எது சரி என்று தோன்றுகிறதோ அதையே சொல்லிவிடுவது எனது வழக்கம் என்பது தங்களுக்கும் தெரிந்திருக்கும்" என்று மரியாதையுடனும், உறுதியாகவும் கூறினான்.

அப்போது இளவரசி, "அப்படியானால் உம்முடைய வழக்கப்படியே இவ்விஷயத்தில் உமக்கு எது சரியென்று தோன்றுகிறதோ அதையே தெரிவியுங்கள். எப்படியேனும் உமது அபிப்பிராயம் யாது என்பது தெரியவேண்டும்," என்று அவனுடன் கேட்டாள். அப்போது பலராமன், "இளவரசியே! பெரியநாயகிச் சீமாட்டியைப் பேசவிட்டிருந்தால் இப்போது நமக்கு என்ன சந்தேகங்களும், அவநம்பிக்கைகளும் ஏற்பட்டிருக்கின்றனவோ அவை தீரும்படி விஷயத்தை விவரமாகச் சொல்லிவிட்டிருப்பாள் என்று கருதுகிறேன். அக்கடிதம் இவ்வளவு தாமதமாகக் கிடைத்ததன் காரணம் என்ன? ஜகதீசன் கடிதம் அவளிடம் எப்படிக் கிடைத்தது? ஜகதீசன் இப்போது எங்கே இருக்கிறான் என்பனபோன்ற பல விஷயங்கள் தெரிந்துபோய் இருக்கும். தங்கள் மைத்துனி அவ்வளவு வற்புறுத்ததலாகவும், கண்டிப்

பாகவும் எழுதியிருப்பதால் பெரியநாயகிச் சீமாட்டியிட மிருந்து இன்னும் சில விஷயங்களைக் கேட்டு அறிந்திருப் பதே சரியான வழியாக இருந்திருக்கும். இப்போதுதான் என்ன? அந்த ஜகதீசன் என்பவன் இப்பரிதிபுரத்தில் இருப் பதாக இருந்தால் எப்படியாவது அவனைப் பார்ப்பதுதான் நலம் என்று எனக்குத் தோன்றுகிறது" என்று கள்ளங் கபடமின்றி விவரமாகத் தன் மனதிலுள்ளதைக் கூறினன்.

இதையெல்லாம் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்த இளவரசி, "அவ்வாருயின் இனி எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பது பற்றி ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன். பலராமரே! இனி இவ்வேலையை முடிப்பது உமது கடமை. இவ்விஷயத்தை விவரமாக அறிந்துகொள்வதில் சற்றும் தாம திக்கவேண்டாம். நீர் ஆடவராக இருப்பதால், அந்த ஜக தீசன் எப்படிப்பட்ட குணமுடையவனுயினும் அவனைப் பார்க்கலாம். அவன் சொல்வதையெல்லாம் கேட்டு ஒரு வகை முடிவுக்கு வரலாம். பெரியநாயகிச் சீமாட்டி இவ் வூரில் எங்கே இருக்கிருள் என்பதை அறிந்துகொண்டு அவள் மூலம் ஜகதீசன் இருக்குமிடத்தை அறிந்து அவ னிடம் அறிமுகம் செய்துகொண்டு விஷயங்களைக் கிரகித்து வாரும். அதுவரை இக்கடிதம் உங்களிடத்திலேயே இருக் கட்டும்," என்று கூறிக்கொண்டே அக்கடிதத்தைப் பலராம ரிடம் கொடுத்தாள்.

அக்கடிதத்தைப் பெற்றுக்கொண்டதும் பலராமன் தன்னிடம் ஒப்புவிக்கப்பட்ட வேலையைக் கவனிக்கப் புறப் பட்டுச்சென்ருன். இளவரசி தன் தோழிகளுடன் தன் தோட்டத்தை விட்டு மாளிகைக்குள் சென்ருள். அப்போது அத்தோழிகள் மூவரும், தாங்கள் நினைத்ததற்கு மாருக நடப்பதை யறிந்து பீதியுடன் ஒருவர் முகத்தை ஒருவர்

நோக்கினர். மாளிகையில் சென்றதும் இளவரசி தோழிகளிடம், "தோழிகளே! நீங்கள் உங்கள் அறைகளுக்குச் சென்று இராச்சாப்பாட்டிற்கு வரலாம். அதுவரையில் நான் என் அறையில் தனியாக இருந்து என் மைத்துனி சுந்தராங்கிக்குப் பெரியதொரு கடிதம் எழுதவேண்டும்," என்று கூறி அவர்களை அனுப்பிவிட்டாள்.

இளவரசியினிடமிருந்து பிரிந்த மூன்று சகோதரிகளான இரங்கம்மாள், அம்புஜம், ஜானகி ஆகிய மூவரும் அவர்களுடைய அறைகளுள் ஒன்றில் புகுந்து தோட்டத்தில் நடந்த விஷயங்களைப்பற்றிச் சிந்திக்கலாயினர். அவ்வறையில் அவர்கள் மட்டும் தனியாக இருந்தபோது இரங்கம்மாள், தான் தோட்டத்தில் எடுத்து மடித்துவைத்த உறையை எடுத்தாள். ஏனெனின், அதில் மற்றொருகடிதம் இருப்பதாக அவளுக்கு அப்போதே தோன்றியதால் தான் வெறும் உறைதானே என்று கிழித்துவிடாமல் அதைப் பத்திரப்படுத்தி வைத்தாள். அப்படியே அதில் ஒரு கடிதமிருந்ததால் அம்மூன்று சகோதரிகளும் மிக ஆர்வத்துடன் அதைப்படித்தார்கள் அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

'இளவரசியே; தங்கள் மைத்துனியின் கடிதத்தைக் கொண்டுவரும் நான். இங்கு வரும்வழியில் சிறையில் அடைபடவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டுவிட்டதால் விரைவில் அக்கடிதத்தைத் தங்களிடம் சேர்ப்பிக்கமுடியவில்லை. இப்போதும் நான் நேரில் வாராதகாரணம் என்னவென்றால், நான் தங்களைக் காணமுடியாதபடி தடுக்கக்கூடிய நிலைமைகள் தங்கள் மாளிகையிலிருக்கிற தென்பதை நான் அறிவேன். அது என்ன என்பதை நான்நேரில் அனுமதிக்கப்படும் போது விவரித்துக்கூறுவேன். இக்கடிதம் கொண்டுவரும்

பெரியநாயகிச் சீமாட்டி தக்கதொரு திருப்தியான பதிலைத் தங்களிடமிருந்து கொண்டுவரக் கூடுமென நான் நம்புவதால் அப்போது நேரில்வந்து என் பணிவைச்செலுத்தி எல்லாவற்றையும் விவரமாகக்கூறுவேன். இப்போது நான் இவ்வூரிலுள்ள டாக்டர் மணவாளன் வீட்டில் தங்கியிருக்கிறேன். இறுதியாக நான் ஒன்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். எது எப்படியிருந்தாலும் யார் என்னகூறினாலும் தாங்கள் என் விஷயத்தில் தவறுதலாகக் கெட்ட அபிப்பிராயம் கொண்டுவிடலாகாது. ஏனெனின், நான் நேரில் சந்திக்கும் போது என் எண்ணங்களெல்லாம் பரிசுத்தமானவை என்பதையும், நான் பரிசுத்த குணங்களுடையவன் என்பதையும், பரோபகாரார்த்தமே நான் பல கஷ்டநஷ்டங்களை அனுபவித்திருக்கிறேன் என்பதையும் ருஜூப்பிப்பேன். என் நோக்கமெல்லாம் இளவரசியாகிய தங்களின் க்ஷேமமேயாகும் என்று உறுதி கூறுகிறேன்.''

இவ்வாறு எழுதப்பட்டிருந்த அதை அம்மூன்று சகோதரிகளும் அச்சத்துடனும் ஆச்சரியத்துடனும் ஆவலுடனும் படித்து முடித்தார்கள். படித்துப் பார்த்தபின்னர் இரங்கம்மாள் மற்ற சகோதரிகளிடம், 'இப்போது என்னசெய்வது? ஜகதீசன் டாக்டர் மணவாளன் வீட்டில் தங்கியிருக்கிறான். இப்போது எனக்கு விஷயம் தெரிகிறது,' என்று கூறிக் கொண்டே திடீரென்று ஏதோ மனக்கவலை யடைந்தவள் போல் விசனமுற்றாள்.

இதை உணர்ந்த சகோதரிகளான அம்புஜமும், ஜானகியும் தங்கள் சகோதரியைக்கண்டு, 'நீ என்ன தெரிந்து கொண்டுவிட்டாய்' என்று பேரார்வத்துடன் கேட்டார்கள். அதற்கு இரங்கம்மாள், 'இப்போது தோட்டத்தில் பெரிய நாயகிச் சீமாட்டி என்னை எதிர்த்துப்பேசுகையில் கூறிய விஷயம் அவள் தற்செயலாகச் சொன்னதல்ல. டாக்டர் மண

வாளன்மூலம் ஏதோ நமது ரகசியத்தை அவர்கள் அறிந்து கொண்டிருக்கிறார்கள். மணவாளனும் இளவரசி பிரசவித்தா ளென்று சந்தேகப்படாமல் பிரசவித்தவள் நானே என்று அறிந்திருக்கிறான் என்று இப்போது தெரிகிறது. அவன் அதை ஜகதீசனுக்குத் தெரிவித்துவிட்டிருக்கிறான். ஜகதீசன் இந்தப் பெரியநாயகியிடம் சொல்லி இருக்கவேண்டும். இப் போது பலராமன் அங்கே சென்று நம்முடைய இந்த அபார மான ரகசியத்தை அறிந்துவந்து விடுகிறான். ஓ கடவுளே! நமது இரகசியம் வெளிப்படும் காலம் வந்துவிட்டது. நமக்கு ஆபத்து சமீபத்தில் இருக்கிறதென்பதில் ஆட்சேபமில்லை,' என்று கையை முறித்துக்கொண்டே கண்ணீர் சொரிந்தாள். அவள் துக்கத்துடன் அருகிலிருந்த சோபாவின்மீது சாய்ந் தாள். ஜானகியும் பீதியடைந்தாள். அம்புஜமும் தங்களுக்கு ஏற்படும் ஆபத்தை ஒருவாறு யூகித்து அறிந்தாளென்றாலும் அவர்க ளிருவரைப்போல் அவ்வளவு அச்சப்படவில்லை. ஆகவே அவள் சற்று தைரியத்துடன் அம்மூவருக்கும் பாதுகாப்பாகவும், பெரிய துணையாகவும், அம்மாளிகையில் இருந்துவரும் இராஜம்மாள் அறைக்குச்சென்றாள். அங்கே அம்புஜம் தங்களுக்கு நேர்ந்த விஷயங்களையெல்லாம் சவிஸ் தாரமாக இராஜம்மாளிடம் கூறினாள். மேலும் இனி என்ன அபாயங்கள் நேரிடுமென்பது பற்றியும் யோசித்தாள்.

உடனே இராஜம்மாளும் அம்புஜத்துடன் மற்ற இரண்டு சகோதரிகளும் துயரத்தாலும் அச்சத்தாலும் பீதியடைந்து படுத்திருந்த அறைக்குவந்து அவர்களைத் தேற்றினாள். தைரி யத்துடன் இருந்தால்தான் எப்படிப்பட்ட ஆபத்தையும் சமாளித்துக்கொள்ளலாம் என்றும், தான் தன்னாலான உதவி செய்வதாகவும் கூறினாள். ஆகவே இராஜம்மாளும், அம் மூன்று சகோதரிகளும் ஒன்றாக உட்கார்ந்து தீர ஆலோசனை செய்ய ஆரம்பித்தார்கள். அவர்கள் இதைப்பற்றி யோசிக்க

யோசிக்க அவர்களுக்கு அச்சமும் அதைரியமும் அவநம்பிக்கையும் அதிகரித்தது.

எனினும் வயதில் முதிர்ந்தவளும், இத்தகைய பல அசந்தர்ப்பங்களில் அனுபவம் பெற்றவளுமான இராஜம்மாள், "பெண்களே! நாம் இப்போது அதைரியப்படுவதில் பயனில்லை. உள்ள நிலைமையினின்றும் எப்படியாவது சமாளித்துக் கொள்ளவேண்டும். ஜகதீசனே நமக்கு நேரான எதிரி; அவன் இப்போது இப்பரிதிபுரத்திலேயே இருக்கிறான். அவன் டாக்டர் மணவாளன் வீட்டில் தங்க நேர்ந்ததும் நமது துர் அதிர்ஷ்டமே. நமக்குக் கெட்டகாலம் இன்னும் இருப்பதனால்தான் அவன் மணவாளன் வீட்டில் தங்கவேண்டியதாயிற்று. மணவாளன் எல்லா ரகசியங்களையும் அவனிடம் சொல்லிவிட்டிருப்பான். அவன் தாராள நோக்கத்துடன் உங்களை மன்னித்துவிடலாமென்றால் இப்போது நீங்கள் தோட்டத்தில் பெரியநாயகிச் சீமாட்டியின் விரோதத்தைச் சம்பாதித்துக் கொண்டுவிட்டதால் அவள் சும்மாவிடமாட்டாள். நாம் இளவரசிக்குத் துன்பம் விளைக்க முயன்றோம். பெண்பாவம் பொல்லாது அல்லவா? அது நம்மையே பற்றிக்கொண்டது. இரகசியமாய்ப் பிரசவித்தது பரிதிபுரத்தில் மிகப் பெரியகுற்றமாகக் கருதப்படுகிறபடியால் பெருந்தண்டனை கிடைக்குமென்பதில் ஆட்சேபமில்லை. இரங்கம்மாளுக்குச் சுமார் இரண்டு வருஷ தண்டனை கிடைக்கும். எங்களுக்கும் வாழ்க்கை கெட்டுப்போயிற்று. இந்த நிலைமையில் நாம் இப்போது இருக்கிறோம்" என்று விவரமாகக் கூறினாள்.

அன்று காலையில் அச்சகோதரிகள் மூவரும் அதே அறையில் சிங்காரித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தபோது தங்களைத் தேவமாதர்களென்றும், அழகிற் சிறந்தவர்களென்றும் கூறிக்கொண்டு இன்பமடைந்தார்கள். ஆனால் அதே

நாள் மாலையில் அதே அறையில் அவர்கள் துக்கத்துடனும், கவலையுடனும் அச்சத்துடனும், வெளுத்த முகத்துடன் கைகளை நெறித்துக்கொண்டே, "ஓ கடவுளே; இப்போது என்னசெய்வது? இப்போது என்னசெய்வது" என்று தங்கள் துணைவியாகிய இராஜம்மாளைக் கேட்கும் நிலையில் இருந்தார்கள். அப்போது கொடுமை இழைப்பதில் சிறிதும் பின்வாங்காத இராஜம்மாள் அச்சகோதரிகளை நோக்கி, "என்னசெய்வது? நாம் தப்பிப் பிழைக்கவேண்டுமாயின் கொலைசெய்யச் சிறிதும் பின்வாங்கலாகாது" என்றாள்.

அப்போது விசனத்தாலும் அச்சத்தாலும் தலைகுனிந்து நின்றிருந்த அவர்கள் இராஜம்மாளின் வார்த்தையைக் கேட்டுத் திடுக்கிட்டு ஏதோ பேச முயன்றார்களென்றாலும் கடைசியில் ஒன்றும் பேசாமல் இராஜம்மாள் முகத்தை விறைக்கப் பார்த்துக்கொண்டு நின்றனர். அச்சமயம் இராஜம்மாள், "ஆம்; நான் சொல்வதில் சந்தேகமொன்றுமில்லை. உங்களைக் கொலைத்தொழிலில் இறங்கும்படி நான் சொல்லப்போவதில்லை. எனினும் அந்தப் பெரியநாயகிச் சிமாட்டியையும், ஜகதீசனையும் கொன்றுவிட வேண்டும். இல்லாவிட்டால் நமக்கு எப்போதும் ஆபத்துதான். நமக்காக அவர்களைக் கொலைசெய்ய வேண்டியவன் டாக்டர் மணவாளனே," என்று மிக்க உறுதியுடனும் துணிவுடனும் கூறிவிட்டு உடனே அக்காரியத்தில் நிச்சயமாக இறங்குபவள்போல் அச்சகோதரிகளை உற்று நோக்கிவிட்டு அவ்வறையைவிட்டுச் சென்றாள். அவள் அவ்விடத்தை விட்டுச் சென்றதும் சகோதரிகள் அவ்வறையின் கதவை உட்புறம் தாளிட்டுக்கொண்டு பரஸ்பரம் ஒருவரையொருவர் நோக்கி இராஜம்மாள் கூறிவிட்டுச் சென்ற பயங்கர விஷயத்தைப்பற்றி அச்சத்துடன் பேசிக்கொண்டார்கள்.

130 - வது அத்தியாயம்

இரத்தினபுரி இளவரசியின் மாளிகையிலுள்ள இரங்கம்மாள் அறையினின்றும் முன் அத்தியாயத்தில் கூறப்பட்டபடி உறுதியுடன் புறப்பட்ட இராஜம்மாள் சற்றும் தாமதியாமல் நேரே டாக்டர் மணவாளனுடைய இல்லத்துக்கருகிலுள்ள ஒரு மதுபானக் கடைக்குள் நுழைந்து தனியான ஒரு இடத்தைக் காட்டும்படி கேட்டுத் தனியான ஒரு அறையில் உட்கார்ந்துகொண்டு மிக அவசரமாக ஒரு கடிதம் எழுதி அக்கடையின் காவற்காரனிடம் கொடுத்து தான் அங்கு பானவகைகளை அருந்துவதற்குள்ளாக டாக்டர் மணவாளனிடம் அக்கடிதத்தைக் கொடுத்து அவனை அழைத்து வரும்படி கட்டளையிட்டாள். அச்சேவகனும் அவள் கட்டளைப்படியே மணவாளன் வீட்டுக்குச் சென்று அவனிடம் அக்கடிதத்தைக் கொடுத்ததுடன் அவனையும் அழைத்துக்கொண்டு வந்துவிட்டான். டாக்டரும் இராஜம்மாளின் கடிதத்தைக் கண்டதும் ஒன்றும் சொல்லாமல் அச்சேவகன் பின்னேயே ஓடிவந்தான்.

டாக்டர் மணவாளன் இராஜம்மாளைக் கண்டதும், "என தன்புள்ள மாதே! நீ நேராக என் வீட்டுக்கு வருவதற்கென்ன? இங்கே இருந்துகொண்டு என்னை ஏன் அழைக்க வேண்டும். உன்னைப் பார்த்தாலே என்மீது அதிக கோபத்துடன் இருப்பதுபோல் தெரிகிறதே. என்னசங்கதி? விவரம் கூறு" என்று ஆத்திரத்துடன் கேட்டான். அப்போது அவள், "கீழே உட்காரு, கீழே உட்காரு. நாம் பேச வேண்டிய விஷயம் மிக அதிகமாக இருக்கிறது" என்று கூறினாள்.

அவள் அதிக கோபத்துடனும் ஆத்திரத்துடனும் அவ்வாறு கூறியதைக் கேட்ட மணவாளன், "ஓ, இதென்ன பயங்கரமா யிருக்கிறதே! உன் குரலும், நீ நடந்துகொள்ளும் மாதிரியும் பார்த்தால் எனக்குப் பயமாக இருக்கிறது. அந்த நமது இரகசியத்தைப்பற்றி நான் யாரிடமும் ஒன்றும் கூற வில்லையே," என்று கூறிக்கொண்டே அங்கிருந்த நாற்காலியில் உட்கார்ந்தான். அப்போது இராஜம்மாள் அதிக கோபத்துடன், "முட்டாள், பயங்காளி, அயோக்கியன், இப்படியா நீ தக்க ஆபத்தான சமயத்தில் ஒரு பெண்ணைவிடப் பயங்கொள்ளித்தனமாக நடந்து கொள்கிறாய்," என்று கடிந்துகொண்டே அவனுடைய கையைப் பிடித்து நெருக்கினாள்.

அவன் அச்சத்தால் நடுநடுங்கிய வண்ணம், "ஆபத்தா? ஆ! நான் உன் கடிதம் பார்க்கும்போதே ஏதோ ஆபத்து ஏற்பட்டிருக்கிறதென்பதை உணர்ந்தேன். உன் கடிதம் பார்க்கும்போதே ஏதோ ஆபத்து ஏற்பட்டிருக்க வேண்டுமென்று நினைக்க வேண்டியதாயிற்று," என்று கூறினான். அதற்கு அவள் சிறிதும் அஞ்சாதவள்போல் மணவாளனைப் பார்த்து, "ஆம், பெரும் ஆபத்து விளையும் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. ஆயினும் நீ மனிதனாக இருந்து ஒரு ஆண் பிள்ளைக்கு இருக்கவேண்டிய தைரியத்தைக் காண்பித்தால் இந்த ஆபத்துகளினின்றும் நாம் தப்பலாம். ஆனால் நீ பயங்காளியா யிருந்தால் நீயும் நானும் மட்டுமல்ல; இளவரசியின் மாளிகையிலுள்ள மூன்று சகோதரிகளும் நம்முடன் சேர்ந்து அழிய வேண்டியதுதான். ஆகவே நீ நிதானமாக இருந்து என் யோசனையைக் கேள்," என்று கூறினாள்.

டாக்டரும் அப்படியே ஆகட்டும் என்று சொல்லும் போது அம்மதுபானக்கடையின் ஆள், சிறிது தின்பண்டங்

களையும் மதுபான வகைகளையும் கொண்டுவந்து மேஜைமீது வைத்துவிட்டுப்போனான். அவன் வெளியே சென்றதும் இராஜம்மாள் எழுந்து அவ்வறையிலும் அதற்குப் பக்கங்களிலும் யாரேனும் இருந்து தங்கள் சம்பாஷணைகளைக் கவனிக்கிறார்களோவெனச் சோதித்துப்பார்த்தாள். அங்கு யாருமில்லை என்பதையும், யாரும் வரமாட்டார்களென்பதையும் அறிந்துகொண்ட பின்னர் தன் ஆசனத்துக்குவந்து மணவாளனை நோக்கிச் சிறிது பானம் அருந்தும்படி கேட்டுக்கொண்டாள். பின்பு பின்வருமாறு அவர்களிடையே சம்பாஷணை நடைபெற்றது.

இராஜம்மாள்:—டாக்டரே! நமக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறதென்பதை நீ முன்பே அறிவாய். என் கடிதம்பார்த்ததும் உனக்கு அச்சம் அதிகரித்துவிட்டது. நான் கூறுவது உண்மைதானே! விஷயத்தை ஒப்புக்கொள்.

மணவாளன்:—ஆம்; நீ பேசுவது உண்மைதான். உன் கடிதம் கண்டதுமே இன்னவகையில்தான் நமக்கு ஆபத்து ஏற்பட்டிருக்குமென்பதை உணர்ந்தேன்.

இரா:—ஆனால் உன்னிடம் ஒப்படைக்கப்பட்ட ரகசியத்தை நீ வெளியிட்டுவிட்டாய் அல்லவா? ஆகவே ஆபத்துக்கு நீதானே காரணம்.

மண:—என்ன சங்கதி? எந்த இரகசியத்தை வெளியிட்டுவிட்டேன். எனக்கு ஒன்றும் புரியவில்லையே.

இராஜ:—டாக்டரே! வீண் விவாதம் வேண்டாம். உண்மையை ஒப்புக்கொள். எங்களைப்பற்றி உனக்கு என்ன தெரியுமோ அந்த இரகசியங்களை யெல்லாம் நீ இப்போது உன் வீட்டில் தங்கியிருக்கும் ஜகதீசன் என்னும் இளைஞனிடம் கூறிவிட்டாயல்லவா?

மண:—இனி உபயோகமில்லை; சிறிதும் உபயோகமில்லை என்பது நிச்சயம். நான் விஷயங்களை மறைப்பதில் பயனில்லை. எல்லா விஷயங்களையும் உன்னிடம் அறிவித்து விடுவதென்றே நிச்சயித்திருக்கிறேன். நீயும் ஏதோ திட்டம் போட்டிருக்கிருய்போ லிருக்கிறதே.

இரா:—டாக்டரே! ஒவ்வொரு நிமிஷமும் சிறந்ததென்பதை மறக்கவேண்டாம். நீ செய்துவிட்ட காரியங்களைப் பற்றி உன்மீது நான் கோபித்துகொள்ளப் போவதில்லை. ஏனெனின் சென்றதை உன்னி நாமிருவரும் சச்சரவிடுவதில் பயனில்லை. ஆனல் இப்போது நீமட்டும் எனக்கு ஒரு வகையில் உதவிசெய்தால் நீ செய்த தவறைத் திருத்திக்கொள்ளலாம். நீ ஜகதீசனிடம் எதை யெல்லாம் கூறிவிட்டாய் என்பதை விவரமாகத் தெரியப் படுத்து.

டாக்டர் மணவாளன் பிறகு எல்லாவற்றையும் விவரமாகத் தெரிவித்தான். அப்போது அவன் தன் வீட்டில் ரமாமணி என்னும் பெயரால் எப்படி ஒருமாது வந்து சேர்ந்தாள் என்பதையும், பிறகு அவன் எப்படி ஜகதீசனைப் பக்கத்து கிராமத்தில் முதலிலும் பிறகு தன் வீட்டிலும் சந்திக்க முடிந்ததென்பதையும், அந்த ஜகதீசன் எவ்வாறு ரமாமணி அம்மாளை ஏரியில் மூழ்குவதினின்றும் காப்பாற்றினனென்பதையும், பிறகு ஜகதீசனுக்கும் தனக்கும் எத்தகைய பேச்சு வார்த்தைகள் நடந்ததென்பதையும், இளவரசியின் மாளிகை சம்பந்தமாகத் தனக்கு என்ன இரகசியம் தெரியுமோ அதை ஜகதீசனிடம் சொன்னதாகவும், ஒருநாள் இரவு எப்படி அம்புஜம் போலீசாரிடம் அகப்பட்டுக்கொண்டாள் என்னும் விவரத்தையும் அறிவித்ததாகவும், மேலும் ஒருநாள் இரவு ஜகதீசன் ஏரிக்கரைக்குச் சென்று

ஒரு குழந்தைப் பிரேதத்தைக் கொண்டுவந்த விவரத்தையும், அதன்மீதிருந்த துணியால் எப்படி அது யாருடையதாக இருக்கவேண்டுமென்று ஜகதீசன் கண்டு பிடித்தானென் பதையும் ஒன்றும்விடாமல் தன் வீட்டில் நடந்த எல்லா விவ ரங்களையும் சாங்கோபாங்கமாகக் கூறினன்.

இவ்விவரத்தைக் கேட்ட இராஜம்மாள் நடுக்கங்கொண் டவளாய், ஜகதீசன் எவ்வளவுதூரம் தன் முயற்சியில் வெற்றி பெற்றுவிட்டானென்பதையும், அக்குழந்தை பிறந்ததன் சம் பந்தமான இரகசியத்தை அறிவதில் அவன் எவ்வளவு விஷ யங்களை அறிந்துகொண்டு விட்டானென்பதையும் உணர்ந்து ஆச்சர்யமும் திகிலும் அடைந்தாள். எனினும் அவள் சிறி தும் தைரியத்தை இழந்துவிடாமல் மிக்க ஆண்மையுடன் இனி என்செய்வது என்பதுபற்றி யோசிக்கலானுள். ஆகவே அவள் டாக்டர் மணவாளனுக்கு அந்த ரமாமணி என்பவளின் உண்மையான பெயர் என்ன என்பது தெரியுமா எனக் கேட்டாள். அதற்கு அவன், தனக்கு அவளுடைய உண் மைப் பெயர் தெரியாதென்றும், எனினும் அவள் சமீப காலம் வரை இரத்தினபுரி அரசமாளிகையில் உயர்தர உத்தி யோகத்திலிருந்தவள் என்று தெரிகிறதென்றும், அவள் மிக்க ரூபலாவண்ய முள்ளவளாகவும், ஐந்துமாத கருப்பிணி யாகவும் இருப்பாளென்றும் கூறினன்.

அப்போது இராஜம்மாள், "ஆ! அவள் பெரியநாயகிச் சீமாட்டிதான் என்பதில் சந்தேகமில்லை. அவளை நான் எப் போதும் பார்த்ததில்லையென்றாலும் நீ சொன்ன முறைகளைக் கவனிக்கும்போது அவளாகத்தான் இருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. இன்று காலை அவள் எங்கேனும் வெளி யில் சென்றதை நீ அறிவாயா?" என்று கேட்டாள். அதற்கு அவன், "ஆம்; காலையில் சுமார் ஒருமணி சாவகாசம்

வரை அவள் வீட்டிலிருக்கவில்லை. பிறகு அவள் வரும் போது மிக ஆத்திரத்துடன் வந்தாள்" என்று கூறினன்.

இரா:—அப்படியானல் அவளே என்பது நிச்சயம். அவளுக்கும் ஜகதீசனுக்கு மிடையில் ஏதோ விசித்திரமான இரகசிய மிருக்கிறது.

மண:—எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. இன்று விடியற் காலையில்கூடச் சாப்பாட்டு அறையில் எழுதும் ஆயுதங்களுடன் வெகுநேரம் பேசிக்கொண் டிருந்தார்கள். அவள் திரும்பிவந்தபோதும் ஜகதீசன் மிக ஆவலுடன் அவள் வரவை எதிர்பார்த்திருந்து உடனே இருவரும் ஏதோ நீண்டநேரம் தனியாகப் பேசிக் கொண்டிருந்தனர்.

இரா:—சற்று நேரத்துக்குமுன் யாரேனும் ஒருவர் வந்து ஜகதீசனைக் கண்டார்களா?

மண:—ஆம்; உன் கடிதம் கிடைப்பதற்குச் சில நிமிஷங்களுக்கு முன்புதான் யாரோ ஒருவர் ஜகதீசனைத் தேடிக்கொண்டு வந்தார். இருவருமாகத் தனி அறையில் ஏதோ பேசிக்கொண்டிருக்கின்றனர். நீ ஏன் இந்தக் கேள்விகளையெல்லாம் கேட்கிறுய்? என்ன இரகசியங்கள் வெளியாய்விட்டது? இப்போது நமக்கு என்ன ஆபத்து ஏற்படப்போகிறது?

இரா:—அது கிடக்கட்டும்; இப்போது நான் கேட்கும் கேள்விக்கு உண்மையான பதிலைச்சொல். குழந்தையைப் பிரசவித்தது யார் என்று நீ நினைத்துக்கொண்டிருக்கிறுய்?

மண:—ஜகதீசன் என்னிடம் சொன்னதிலிருந்தும், மற்றும் சில விஷயங்களை அவன் கண்டுபிடித் திருப்பதிலிருந்தும் பிரசவித்தவள் இளவரசி என்று நம்ப இடமில்லை.

இரா:—சரி, இனி எதையும் மறைக்க முயல்வதில் பயனில்லை. எப்படியாவது நாங்கள் அகப்பட்டுக்கொண்ட ஆபத்தினின்றும் தப்ப முயற்சிப்பதே புத்திசாலித்தனமாகும். உண்மையிலேயே உன் பாதுகாப்பில் அன்று பிரசவித்தவள் இரங்கம்மாள் என்பதில் சந்தேகமில்லை. இளவரசி பிரசவித்தாள் என்னும் வதந்தியைப் பரவச் செய்வதற்காகவே உன்னையும் ஏமாற்ற முயன்றோமே யன்றி வேறில்லை.

மண:—ஆனால், நமக்கு என்ன ஆபத்துவரும் என்று நீ நினைக்கிறாய்? இப்போது ஜகதீசனைத் தேடிக்கொண்டு வந்த கனவான் யார்? அவர் தன் பெயரைச்சொல்லாமல் மிக முக்கியமான சில சங்கதிகளைப் பேசவேண்டுமென்று மட்டும் கூறினார்.

இரா:—அவர்தான் இளவரசியின் காரியஸ்தர் பலராமர். அவரை நீ இதற்குமுன் பார்த்ததில்லையா?

மண:—நேற்றிரவு ஜகதீசன் எப்படியோ ஒரு குழந்தையின் பிரேதத்தைக் கொண்டுவந்து பல இரகசியங்களை ஆராய்ந்தது முதல் எனக்கே மிக அச்சமாகத்தான் இருக்கிறது. பலவிதமான எண்ணங்கள் என் உள்ளத்தில் தோன்றி மறைகிறது. ஒருமுறை இளவரசி தோட்டத்தில் பரிவாரத்துடன் சென்றுகொண்டிருந்த போது சிறிதுதூரத்தில் ஒரு அழகிய கனவான் நடந்துகொண்டு பின்சென்றதைப் பார்த்த ஞாபகம் வருகிறது. ஜகதீசனிடம் அவருக்கு இப்போது என்ன வேலை.

இரா:—ரமாமணி என்னும் பெயரால் உன் வீட்டில் தங்கியிருக்கும் பெரியநாயகிச் சீமாட்டி இன்று காலை இளவரசியின் மாளிகைக்கு வந்திருந்தாள்.

மண:—அப்போது எல்லா இரகசியங்களும் வெளியாய்விட்டனவோ?

இரா:—இல்லை; இப்போது வெளியாய்விட வில்லையென்றாலும் விரைவில் வெளியாய்விடுமென்பதில் ஆட்சேபமில்லை. அப்போது நமக்கு ஆபத்து ஏற்படுவது நிச்சயம்.

மண:—அப்படியானால் இப்போது என்னசெய்வது? எங்கேனும் ஓடிப்போகலாமா? நாம் அனைவரும் ஓடிப்போய் தலை மறைவதற்கு வேண்டிய உதவிகளைச்செய்ய நான் தயாராய் இருக்கிறேன். சிறைத்தண்டனை எனக்குமட்டுமல்லாமல் அப்பெண்களுக்கும் கிடைக்குமே. இது நினைப்பதற்கும் அச்சமாக இருக்கிறதே. ஆகவே ஓடிப்போவதே நல்லது.

இரா:—ஓடிப்போவதா? நீ பயங்காளியாகவும் மடையனாகவும் இருக்கிறாயே. எங்கே ஓடிப்போக முடியுமென்று நீ நினைக்கிறாய்? நாம் இத்தேசத்தைவிட்டுப் போக வேண்டுமாயின் பாஸ்போர்ட் என்னும் அனுமதிச்சீட்டு பெற்றுக்கொண்டல்லவோ போகவேண்டும். அப்போது நம்மைப் பிடித்துவிடமாட்டார்களா?

மண:—ஆம்; பிடித்துவிடுவார்கள். நீ கூறியதும் உண்மைதான். அதற்காக இப்போது என்னசெய்வது? அச்சமாக இருக்கிறதே. உடம்பெல்லாம் நடுங்குகிறதே.

இரா:—நீ உரக்கப்பேசாமலும் நிதானமாகவும் இரு. என்னைப்பார். நான் உன்னைப்போல் பீதியை அடைந்துவிடவில்லை. நமக்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்து எவ்வளவுதான் பெரிதாக இருந்தாலும் அதிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியும் என்று நாம் நிச்சயமாக நம்புவதால் தான் சிறிதும் பயப்படாமல் இருக்கிறேன். நாம் பூர்த்தி

யாக நமது எதிரிகளின் கையில் அகப்பட்டுக்கொண்டு விடவில்லை. நாம் சாமர்த்தியமாகவும் தைரியமாகவும் நடந்துகொண்டால் அவர்களிடமிருந்து தப்பித்துக் கொள்ளலாம்.

மண:—நீ கூறுவது உண்மையாயின் நான் அளவிலா மகிழ்ச்சி யடைவேன். எந்த முறைகளைக் கைக்கொண்டால் நாம் வெற்றியடையலாமென்று நீ நினைக்கிறாய்.

இரா:—ஜகதீசன் ஆராய்ச்சி செய்துவரும் முறைகளைப்பார்த்தால் அவன் நமது ரகசியங்களை வெளிப்படுத்தி நம்மைத் தண்டிக்க வேண்டுமென்னும் எண்ணத்துடன் அவன் இல்லையென்று நிச்சயமாகத் தெரிகிறது. ஆனால் நம்மைப் பயமுறுத்தி இளவரசியினிடமிருந்து பிரித்துவிட்டு இளவரசியைக் காக்கவேண்டுமென்பதே அவனுடைய கருத்துபோலக் காணப்படுகிறது.

மண:—ஆம்; அவன் நம்மை ஏதேனும் தொந்தரை செய்ய வேண்டுமென்று நினைத்திருந்தால் அவனுக்குச் சில ரகசியம் தெரிந்தவுடனே போலீசாரிடம் புகார் செய்துவிட்டிருப்பானல்லவா? எனினும் நாம் இப்போது தப்பித்துக்கொள்ள முயற்சி செய்வதற்குமுன் அவன் நம்மை ஆபத்தில் சிக்க வைத்துவிடமாட்டான் என்பதற்கு என்ன உறுதி இருக்கிறது?

இரா.—இப்போது ஜகதீசன் ஒன்றும் முடிவான காரியத்தில் இறங்கிவிடமாட்டான் என்பது நிச்சயம். ஜகதீசனுடன் பலராமன் பேசிக்கொண்டிருப்பதாகச் சொன்னாயல்லவா? ஆகவே அவர்கள் பல விஷயங்களைப்பற்றி ஆலோசித்துக்கொண்டிருப்பார்கள். இன்னும் சிலமணி நேரம் அவர்கள் பேசிக்கொண்டிருப்பார்கள். இரவு வருவதற்கு இன்னும் அதிக நேரமில்லை. இரவு வந்த

தும் ஜகதீசனையும் பெரியநாயகிச் சீமாட்டியையும் இவ்வுலகத்தினின்றும் அப்புறப்படுத்தவேண்டும். நீ சிறிதும் இரக்கமின்றி அவர்களிருவரையும் தீர்த்துவிட வேண்டும்.

மண:—ஆம்; அதைத்தவிர வேறு வழியில்லையென்றே நானும் நினைக்கிறேன். ஆனால் பலராமன் சங்கதி என்ன?

இரா:—அவனை நான் பார்த்துக்கொள்கிறேன். நீ உன் வேலையை முடித்துவிட்டால் நான் என்வேலையை முடித்து விடுகிறேன். எப்படி இருந்தாலும் ஜகதீசனும் பெரியநாயகியும் இன்றிரவு இறந்துவிடட்டும். உன்னிடத்தில் பலவகையான விஷத்திராவகங்கள் இருக்கின்றனவல்லவா? பானவகைகளுடன் அதைச் சேர்த்துக் கொடுத்துவிடு. இக்காரியம் இன்று தீர்ந்துவிட வேண்டும்.

மண:—கொல்வதற்கு எத்தனையோ வகைகள் இருக்கின்றன. எதை உபயோகித்தால் விரைவில் காரியத்தை முடித்துவிடலாமோ அதை உபயோகப்படுத்தி என் வேலையைச் செய்துவிடுவேன் என்று நிச்சயமாக நீ நம்பு.

இரா:—சரி, சந்தோஷம். அப்படியானால் இனி நீ உன் வீட்டுக்குச் செல். நமக்கு ஆபத்து வாராதென்னும் எண்ணம் உனக்கு இருக்குமாயின் நீ உன் கடமையினின்றும் தவறக்கூடாது. ஜாக்கிரதை.

மண:—ஜகதீசனும் பெரியநாயகியும் இன்னும் சொற்ப நேரம்தான் உயிரோடிருப்பார்கள் என்பது நிச்சயம்.

இவ்வாறு கூறிக்கொண்டே மணவாளன் அம்மது பானக் கடையைவிட்டுப் புறப்பட்டுத் தன் வீட்டுக்குச் சென்

ளுன். இராஜம்மாளும் ஐந்து நிமிஷங்கள் அங்கு தங்கி யிருந்துவிட்டுப் பின்னர் இரத்தினபுரி இளவரசி தங்கியிருக்கும் மாளிகை நோக்கிச்சென்ருள். ஆனல் உடனே நேராக மாளிகைக்குப் போய்விடவில்லை. அம்மாளிகைக்குச் செல்லும் வழியிலுள்ள ஒத்தைப்பாதை யொன்றில் ஒரு மரத்தின் பக்கத்தில் பதுங்கியிருந்தாள். ஏனெனின் ஜகதீசனுடன் பேசிக்கொண்டிருக்கும் பலராமன் அவ்வழியேதான் மாளிகைக்குத் திரும்பவேண்டுமாதலால் அங்கே அவனைச் சந்தித்து உள்ள நிலைமையை அறிந்துகொள்ள வேண்டுமென்று காத்திருந்தாள். ஆனல் ராத்திரி நெடுநேரம் வரை பலராமன் ஜகதீசனுடன் தங்க நேரிடும் என்பதை அவள் அறியவில்லை. இதற்கிடையில் பலராமனும் ஜகதீசனும் டாக்டர் மணவாளனுடைய மாளிகையில் என்ன செய்கிருர்களென்பதைக் கவனிப்போம்.

131 - வது அத்தியாயம்

இளவரசியின் மாளிகையிலுள்ள தோட்டத்தில் இளவரசியைச் சந்தித்து ஜகதீசன் தன்னிடம் கொடுத்த கடிதத்தைக் கொடுத்துவிட்டுத் திரும்பிய ரமாமணி என்னும் பெரியநாயகிச் சீமாட்டியுடன் ஜகதீசன் பேசிக்கொண்டிருக்கையில் மணவாளன் வீட்டுச் சேவகன் அவர்களை யணுகி யாரோ ஒருவர் வந்திருப்பதாக அறிவித்தான். அப்போது பெரியநாயகி ஜகதீசனிடம், "நீ அக்கனவானை இங்கேயே அழைத்துப் பேசு. அவர் இரத்தினபுரி இளவரசியின் மாளிகையைச் சேர்ந்தவரா யிருக்கவேண்டும். இதற்கிடையில் நான் அடுத்த அறையில் தங்கியிருக்குர் செல்வாம்பாளுடன் பேசிவிட்டு வருகிறேன்" என்று கூறிச்சென்ருள்.

பெரியநாயகி, ஜகதீசனிடம் செல்வாம்பாளுடன் பேசி விட்டு வருவதாகச் சொன்னதன் காரணம் யாதெனின், ஜக தீசனுக்கு செல்வாம்பாளின் உண்மைப் பெயர் தெரியாதென் பதே. ஆனால் ஜகதீசன் செல்வாம்பாளைக் கண்டதும் அவள் யாராயிருக்க வேணடுமென்பதை ஒருவாறு அறிந்துகொண் டான். அவன் ஒருமுறை இரத்தினபுரி இளவரசர் மாளி கைக்குள் நடந்த தனி நாடகத்துக்குச் சென்றபோது இம் மாதைப் பார்த்த ஞாபகம் அவனுக்குவந்தது. ஆனால் செல் வாம்பாளுக்கு ஜகதீசன் இன்னானென்று தெரியாது.

பெரியநாயகி பக்கத்து அறைக்குச் சென்றதும், ஜக தீசன், வெளியில் காத்திருக்கும் கனவானை அழைத்து வரும் படி சேவகனிடம் சொன்னான். அக்கனவானும் உள்ளே வந்து தான் இன்னானென்று அறிமுகப்படுத்திக் கொண்ட தும் நமது ஜகதீசன் அவனை மிக்க மரியாதையுடன் வரவேற் றான். அப்போது அவர்களிருவருக்கும் இடையில் பின் வரும் சம்பாஷணை நடைபெற்றது.

பலராமன்:—உன்னுடன் சில விஷயங்களைப்பற்றிப் பேசுவ தற்காக என்னை இரத்தினபுரி இளவரசியார் அனுப்பி னார்.

ஜகதீசன்:—நான் கொண்டுவந்ததும், நானே எழுதியதுமான இரு கடிதங்களை அனுப்பினேனே. அதில் என் கடிதத் தைக் கண்டதன்பயனாக உன்னை இளவரசி அனுப்பி னாள்போலும்! என் காரியத்தில் வெற்றி ஏற்பட்டு வரு வதைக்கண்டு சந்தோஷப்படுகிறேன்.

பல:—(ஆச்சரியத்துடன்) நீ எழுதிய கடிதமா? ஓஹோ! இப்போது தெரிந்துகொண்டேன். சுந்தராங்கி அம்மை யார் எழுதியனுப்பிய கடிதத்துக்கு உரைபோட்ட காகி

தத்திலேயே நீ உன் விஷயங்களை எழுதியிருந்தாய் போலும்!

ஜக:—ஆம்; நான் அப்படித்தான் செய்தேன். ஏனெனின் இரண்டு மூன்று கடிதங்களை அனுப்பினால் யாரேனும் சந்தேகப்படுவார்களே என்று அஞ்சியே அவ்வாறு செய்தேன்.

பல:—ஆனால் சம்பவம் வேறுவிதமாக நிகழ்ந்துவிட்டது. நீ உரையாக அனுப்பிய கடிதத்தை இளவரசி பார்க்காமல் கீழே போட்டுவிட்டாள். அதை இரங்கம்மாள் எடுத்து வைத்துக்கொண்டதை நான் பார்த்தேன்.

ஜக:—அப்படியானால் அக்கடிதத்திலுள்ள சங்கதியை நீங்கள் அறியீர்கள் போலும்.

பல:—நண்பா! நான் உன்னை முதல்முறை சந்திக்கும் இப்போதே சில கஷ்டமான விஷயங்களைச் சொல்ல வேண்டி யிருப்பதால் உண்மையிலேயே வருந்துகிறேன். அதாவது உன்னைப்பற்றி இளவரசிக்கு நல்ல அபிப்பிராயம் இல்லை. அதிலும் இன்று பெரியநாயகிச் சீமாட்டி வந்ததில் இன்னும் அதிக தப்பபிப்பிராயம் ஏற்பட வழியாயிற்று. ஏனெனின் அவள் கருப்பவதியா யிருக்கிறாளன்றோ?

ஜக:—ஆம்; பெரியநாயகிச் சீமாட்டி தான் இன்று காலை இளவரசியின் மாளிகையில் அனுபவிக்க நேர்ந்த கஷ்டங்களைப்பற்றி எல்லாம் கூறினாள். அவள் இருந்த நிலைமையில் அவளிடம் என்கடிதம் அனுப்பியது தவறாகவும் முட்டாள்தனமாகவும் இருக்கலாம். எனினும் நானே நேரில் வந்திருந்தால் இளவரசியை எளிதில் பார்த்திருக்கமுடியாததலால் அவளை அனுப்பவேண்

டிய அவசியம் ஏற்பட்டது. எப்படியேனும் அக்கடிதத்தை இளவரசியிடம் சேர்ப்பிக்க வேண்டுமென்னும் எண்ணத்துடனேயே அவளை அனுப்பினேன். என் குணுதிசயத்தைப்பற்றி நானே சொல்லிக்கொள்வதில் பயனில்லை. போகப்போக நீங்களே தெரிந்துகொள்வீர்கள். சுயநல நோக்கத்தால் நான் ஒன்றும் செய்யவில்லை.

பிறகு ஜகதீசன் பலராமனிடம் தான் யார் என்பது பற்றியும், தான் எப்படி அச்சகோதரிகளில் ஒருத்தியாகிய மீனும்பாள் மூலம் அவர்கள் இளவரசிக்கு விரோதமாகச் செய்துவரும் சூழ்ச்சிகளை அறிந்தான் என்பதையும், பின்னுல் அச்சகோதரிகளைத் தொடர்ந்து வருகையில் அவர்கள் அவனை மயக்கச்செய்த சூழ்ச்சிகளைப்பற்றியும், தான் இக்காரியத்தில் இறங்கியதால் என்ன கஷ்டநஷ்டங்கள் ஏற்பட்டதென்பது பற்றியும், இப்போது எவ்வளவு தூரம் தான் விஷயங்களைக் கண்டுபிடித்திருக்கிருன் என்பதுபற்றியும், இனி என்னசெய்யப்போவதாக உத்தேசித்திருக்கிருன் என்பது பற்றியும் விவரமாகக் கூறினுன். அவன் தான் எவ்வாறு ஏரிக்கரையில் பெரியநாயகிச் சீமாட்டியைக் காண நேர்ந்து அவள் மூலமாக டாக்டர் மணவாளன்வீட்டில் தங்கநேர்ந்தது என்பது பற்றியும் விவரித்தான்.

அதுமட்டுமேயன்றித் தான் இளவரசியின் தோழிகளைப் பற்றியும் அவர்களுடைய காதலர்களைப்பற்றியும் போலீஸ் குறிப்புப் புஸ்தகமூலமாகக் கண்டறிந்த ரகசியங்களையும் குழந்தையின் பிரேதத்தை ஏரியிலிருந்து கொண்டுவந்திருப்பதையும், இளவரசியைப்பற்றி என்ன தவருன எண்ணம் பரவி வருகிறதென்பது பற்றியும் விஸ்தாரமாகக் கூறினுன்.

இவ்விஷயங்களை யெல்லாம் நிதானமாகக் கேட்டு பலராமன் ஆச்சர்யமும், திகிலும், அடக்கமுடியாக் கோபமும்

அடைந்தான். மூன்று சகோதரிகள் இளவரசிக்கு விரோத மாகச் செய்துவரும் சூழ்ச்சிகளைக் கண்டு பிரமிப்பும் ஆச் சர்யமும் அடைந்தான். இவைகளை யெல்லாம் ஜகதீசன் மிக்க சிரமப்பட்டு ஆராய்ந்துவருவது கண்டும் வியப்படைந் தான். இதில் அவன் அடைந்த கஷ்டங்களைக் கண்டும் அனுதாப மடைந்தான். இரங்கம்மாள், அம்புஜம், ஜானகி ஆகிய மூன்று சகோதரிகளும் அழகிற் சிறந்தவர்களா யிருந் தும் அவ்வழகுக்கேற்ற நற்குணங்கள் இல்லாதவர்களாயும், பெரிய காமிகளாயும், வஞ்சனையே உருவெடுத்து வந்தவர்க ளாயும் இருப்பதை யறிந்தும் ஆத்திரமும் கோபமும் அடைந் தான். எனினும் பரோபகார புத்தியுடைய இளைஞனை ஜக தீசன் திக்கற்ற இளவரசிக்காக இவ்வளவு பாடுபடுவதைக் கண்டு சந்தோஷமடைந்தான்.

ஆகவே பலராமன், "இளவரசியின் பெயரால் உனக்கு நான் என் வந்தனம் செலுத்துகிறேன். ஏனெனின் நீ இளவரசியின் நன்மைக்காகப் பலவகைக் கஷ்டநஷ்டங்களி லும் பாடுபடுவது பாராட்டத்தக்கது. நீ ஒருவன் மட்டும் இல்லாமலிருந்தால் அப்பாவிகள் இளவரசியை அழிக்க எடுத் துக்கொண்ட முயற்சி வெற்றிபெற்றே இருக்கும். அவள் தன் உயிரைவிடத் தன் மானத்தையே அதிகம் கருதுவதால் இப்போது அவள் உனக்கு அதிகம் கடமைப்பட்டிருக்கிறாள். நீ செய்துவரும் அரியகாரியத்தைக் கண்டு நான் என் சந் தோஷ மிகுதியால் இவ்வாறு கூறுகிறேனேயன்றி வேறில்லை" என்றுசொல்லி வணக்கம் செலுத்தினான்.

அப்போது ஜகதீசன் அந்த வந்தனத்தை ஏற்றுக்கொண் டவனேபோல், "நான் நிச்சயமாகக் கூறுவேன். அந்த மூன்று சகோதரிகளும் இளவரசியின் மானத்தைக் குலைக்க முயற்சிப்பதுடன் உன்னுடைய பெயரையும் இளவரசியுடன்

சம்பந்தப்படுத்தி யிருக்கிறார்கள் என்பது நிச்சயம்" என்று கூறினான்.

அதைக் கேட்டதும் பலராமன் திடுக்கிட்டு கோபத்துடனும் ஆச்சர்யத்துடனும் தன் ஆசனத்தினின்றும் எழுந்து, "அப்படியா! இதைவிடப் பிரமாதமான பொய் வேறொன்றும் இருக்கமுடியாது. இவ்வளவு அபாண்டங்களையா சுமத்துகிறார்கள். ஆனால் நான் ஒரு காலத்தில் அவளை நேசித்ததுண்டு. அவள் தன் தகப்பனார் மாளிகையில் வாலிபப் பருவத்தில் வளர்ந்துவந்தபோது நான் அம்மாளிகையில் உத்தியோகம் செய்ய நேர்ந்தகாலத்தில் அவளுடைய அழகையும் குணாதிசயங்களையும் யௌவன பிராயத்தையும் கண்டு நான் பிரமித்து அவளிடம் அளவிலாக்காதல் கொண்டதுண்டு. ஆனால் அக்காதல் தீய எண்ணமுடையதன்று. அவள் அழகு மிக்க தேவலோக மாது என்று நான் கருதி அவளைத் தெய்வமாகக் கொண்டாடி அவளுடன் பேசமுடியுமா? அவள் சதா என் எதிரில் இருப்பாளா என்றெல்லாம் சதா சர்வகாலமும் ஏங்கிக்கொண்டிருந்தேன். நான் அவளிடம் அவ்வளவு காதல் கொண்டுளேன் என்பதை அவளும் ஒருவாறு குறிப்பால் உணர்ந்துகொண்டு என்னிடம் அன்புள்ளவள்போல் காண்பித்துவந்தாள். நான் அவளை யடைய முடியாதென்பதை நன்றாப அறிந்திருந்தும் பின்னால் என்ன நடக்கப்போகிறதென்பதுபற்றிக் கவலைகொள்ளாமல் அச்சமயத்தில் அவள் அழகைக் கண்ணாரக்கண்டு இன்புறுவதே போதுமானதென்று கருதியிருந்தேன். அவளும் என்பால் அன்புசெலுத்தி சமயம் வாய்த்தபோதெல்லாம் என்னுடன் இன்பமாகப் பேசிவந்தாள். எங்களிருவரிடையே இப்படிப்பட்ட காதல் அதிகரித்துவருகிறதென்பது எப்படியோ இளவரசியின் பெற்றோர்களுக்குத் தெரிந்துவிட்டது. அவர்கள்

எங்களைப் பிரித்துவிட வேண்டுமென்னும் எண்ணத்துடன் அவளை இரத்தினபுரி சக்கரவர்த்தியின் மகனான இளவரச ருக்குக் கலியாணம் செய்துகொடுக்க ஏற்பாடு செய்ததுடன் என்னையும் வேறு ஒரு தேசத்துக்கு அனுப்பிவிட்டார்கள். அப்போது நான் அடைந்த மனக்கவலையை அளவிட்டுரைக்க முடியாது. அப்போதுதான் நான் அது நமக்கு எட்டாத பழம்; அதற்கு ஆசைப்பட்டதே தவறு என்பதை யுணர்ந்து இனி அவள் உருவமே எனது மனக்கண்முன் தோன்றுதபடி அடியோடு அவளை மறந்துவிடுவதென உறுதி செய்துகொண்டு அவ்வாறே மறந்துவிட்டேன். அவளும் என்னைப்பற்றி முற்றும் மறந்துவிட வேண்டுமென்றும், அப்படி மறந்தால்தான் தன் கணவனிடம் முழுமனதுடன் அன்பு செலுத்தி கணவனுக்கேற்ற உண்மை மனைவியாக இருப்பாளென்றும் கருதினேன். அப்படியே நடைபெற வேண்டுமென்றும் இறைவனைப் பிரார்த்தித்தேன்,'' என்று கூறிக்கொண்டே கண்ணீர் விட்டு அழுதான். எதிரில் யார் இருப்பது என்பதையும் மறந்துவிட்டான். ஜகதீசனும் அவன் ஏதோ உற்சாகத்துடன் கூறுவதைத் தடுக்கலாகாதெனக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தான்.

பலராமன் மீண்டும் கூறியதாவது:—“நான் வெளிதேசம் போய்விட்டபிறகு அவளுக்குக் கலியாண மாய்விட்டதென்று கேள்விப்பட்டேன். ஆனல் அவள் சந்தோஷமான வாழ்க்கையை நடத்தவில்லை யென்றும், இளவரசன் அவளிடம் அன்புடன் நடந்துகொள்ளவில்லை யென்றும் கேள்விப்பட்டேன். மற்றும் சொற்பகாலத்துக்குப் பின்னர் அவளுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்ததென்றும், அக்குழந்தை பிறந்த பின்னரும் இளவரசன் தன் மனைவியை நேசிக்கவில்லை யென்றும் தெரியவந்தது. இவ்வாறு பல வருஷங்கள் கழிந்து

விட்டன. நானும் அந்த உத்தியோகத்தை விட்டுவிட்டு ஒரு சேனையில் சேர்ந்தேன். நான் என் உத்தியோகங்களில் நல்ல முன்னேற்றமும் நற்சாட்சிப் பத்திரங்களும் பெற்றே னென்றாலும் என் மனமெல்லாம் என் காதலியின் க்ஷேமத் திலேயே கவனமாக இருந்தது. சொற்ப வருஷங்களுக்குப் பிறகு உத்தியோகத்தை விட்டுவிட்டு ஓய்வு பெற்றுக்கொண்டு நிம்மதியான வாழ்க்கையை நடத்திவருங் காலையில் இரத்தின புரி இளவரசி தன் பரிவாரங்களுடன் நான் இருந்த தேசத் தில் சுற்றுப் பிரயாணம் செய்துகொண்டிருக்கிறாள் எனக் கேள்விப்பட்டு ஆச்சரியமடைந்தேன். அப்போது என் உள் ளத்தில் அடக்கமுடியாத ஒரு உணர்ச்சி தோன்றிற்று. அதா வது எப்படியாவது இளவரசியை நேரில் சந்திக்கவேண்டு மென்பதேயாகும். முதலில் நான் அதை அடக்க முயற்சித் தேன். எனினும் அவ்வாறு அடக்கமுடியாமற் போயிற்று. ஆகவே நான் அவள் தன் பரிவாரங்களுடன் இறங்கியிருந்த ஓட்டலுக்குப்போய் என் அறிமுகச்சீட்டை அனுப்பினேன். உடனே அவள் என்னை நேரில் வரும்படி அனுமதித்தாள். ஆகவே நான் சந்தோஷத்துடன் அவள் இருந்த அறைக்குச் சென்று அவளை நேரில் கண்டு மனம்பூரித்தேன். அவள் என்னைப் பார்த்ததும், "என் பழைய நண்பன் என்னும் முறையில் உன்னை நான் இப்போது வரவேற்கிறேன். இரு பது வருஷங்களுக்குமுன் நமக்குள் நடந்த விஷயங்களை அடி யோடு மறந்துவிட்டால் வெறும் நண்பன் என்னும் முறை யில் நீ என்னைக் காணலாம்" என்று பரிசுத்த மனத்துடன் கூறினாள். அவள் கருத்தை நான் அறிந்துகொண்டேன். உடனே என் எண்ணத்திலும் மாறுதல் ஏற்பட்டுவிட்டது. என் காதலுக்குத் தக்க சன்மானம் கிடைக்கவில்லையே என்று கவலைப்படாமல் உண்மைச் சமயவாதியேபோல் என் மனத்தினின்றும் தீய எண்ணங்களையெல்லாம் அகற்றிவிட்டு

துறவறம் பூண்டேன். எனினும் இளவரசியின் நண்பன் என்னும் முறையில் அவளுடன் இருக்கக்கூடிய பாக்கிய மேனும் எனக்குக் கிடைத்ததுபற்றிச் சந்தோஷமடைந் தேன். பிறகு அவள் என் க்ஷேமலாபங்களைப்பற்றி விசா ரித்தாள். நானும் எல்லாம் விவரமாகக் கூறினேன். அப் போது அவள் நான் இஷ்டப்பட்டால் அவளுடைய காரி யஸ்தராக இருக்கலாமென்று தெரிவித்தாள். என்னால் அப் பதவியை மறுக்கமுடியவில்லை. ஆகவே நான் அதை உடனே ஒப்புக்கொண்டேன். நான் அவ்வேலையில் அமர்ந்த'பின்னர் ஒருநாளாவது அவள் என்னை ஏறெடுத்துப் பார்த்ததில்லை. அவள் மிக்க கண்ணியமாகவே நடந்துகொள்கிறாள். எங் கள் வாலிபப் பருவத்தில் நாங்கள் பரஸ்பரம்கொண்ட காதலை அடியுடன் மறந்துவிட்டோம். இப்போது நான் அவள் பரிவாரத்தில் ஒருவனாக, ஒரு காரியஸ்தனாக மட்டுமே இருக் கிறேன். பெரிய உத்தியோகத்தில் இருந்தவனும், கண்ணி யம் வாய்ந்தவனுமான என் வார்த்தையை நம்பு. அவள் என்னிடம் ஒரு எஜமானிபோலவும், நான் அவளிடம் ஒரு உத்தியோகஸ்தன் போலவும்தான் நடந்துகொள்கிறோம்."

ஜக:—ஆம்; நீ இவ்வளவுதூரம் சொல்லவேண்டியதில்லை. இளவரசியின் கற்பில் எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை. அவள் யோக்கியமானவள் என்பதே என் அபிப்பிரா யம். ஆனால் அவளிடத்தில் தோழிகளாக இருக்கும் அந்த மூன்று சகோதரிகள்தான் இவ்வாறு இல் லாத பழியையெல்லாம் கற்பிக்கின்றார்கள். அவர்கள் பொறுக்கமுடியாத துன்மார்க்கிகள்.

பல:—ஆம்; வாஸ்தவமே. இவ்வளவு தொல்லைகளுக்கும் அவர்களே காரணம். இப்போது இளவரசியின் மானத் தைக்காக்கவும், அக்கொடிய பெண்களைத் தண்டிக்கவும் நீ என்ன ஏற்பாடு செய்யப்போகிறாய்?

ஜக:—அவர்கள் செய்துவரும் சதியாலோசனையை வெளிப்படுத்த வேண்டுமாயின் அவர்கள் எந்தெந்த துறையில் என்ன செய்திருக்கிறார்கள் என்பதையும், இளவரசியின்மீது என்னவிதமான பழிகளைச் சுமத்த ஏற்பாடு செய்திருக்கிறார்களென்பதையும் கவனிக்கவேண்டும். முதலாவதாக அவர்கள் இளவரசியே அம்மாளிகையில் ஒரு குழந்தையைப் பிரசவித்தாள் என்று ருஜூப்பிக்க முயன்றிருக்கிறார்கள். ஆனால் அவ்வாறு பிரசவித்தது இரங்கம்மாள்தான் என்று நிச்சயமாக நிரூபித்துவிடலாம். இரண்டாவதாக, இளவரசி பல காதலர்களை அந்த மாளிகையில் இராக்காலத்தில் சேர்த்துக்கொண்டாள் என்று பழிசாட்ட முயன்றிருக்கிறார்கள். ஆனால் அக்காதலர்களும் அம்புஜம், ஜானகி ஆகியவர்களுக்காகவே வந்திருக்கிறார்கள் என்று நிச்சயமாக ருஜூப்பித்துவிடலாம். மூன்றாவதாக உனக்கும் இளவரசிக்குமிடையில் சம்பந்த மிருப்பதாகவும், நீ இராக்காலங்களில் உன் அறையிலிருந்து இளவரசியின் அறைக்குச் செல்வதைச் சிலர் கண்டதாகவும் சொல்லப்படுவது. இது விஷயத்தில் உண்மை என்ன என்பதை நிச்சயமாக நிரூபிக்கத்தக்க அத்தாட்சிகள் இன்னும் அகப்படவில்லை. அவர்கள் கூறுவது பொய் என்று நமக்கு இப்போது தெரிவது வேறு விஷயம். நாம் அதைப் பல அத்தாட்சிகளுடன் ருஜூப்பிக்கவேண்டும். அச்சகோதரிகளே இதை வேண்டுமென்றே கட்டிவிட்டிருக்கிறார்கள் என்பது நிச்சயம். இதற்கெல்லாம் முக்கிய காரணம் அச்சகோதரிகளுடன் இருக்கும் இராஜம்மாளே. மேலும் இதில் வண்ணாத்தி சுவர்ணமும் சம்பந்தப்பட்டிருக்கிறாள் என்றும் தெரிகிறது. அவள் தானே டாக்டர் மனைவாளின் அம்மாளிகைக்கு வந்து

186556.

இரங்கம்மாள் பிரசவித்ததுக்குத் துணைசெய்தபோது அக்குழந்தையின் பிரேதத்தை வெளியே எடுத்துவந்தாள் என்று சொன்னேன். ஆகவே நீ அந்த வண்ணாத்தியைப் பிடித்து அவளுக்குத் தெரிந்த உண்மையை யெல்லாம் சொல்லும்படி செய்தால் சில விஷயங்கள் வெளியாகும்.

பலராமன்:—நான் அப்படியே செய்து விஷயத்தைக் கிரகிக்கிறேன்.

ஜக:—அவளைக் கேட்டால் சில விஷயங்கள் வெளியாகலாமென்பது என் அபிப்பிராயம். உனக்கும் இளவரசிக்கும் ஏதோ சம்பந்தமிருப்பதாகக் கிளம்பியிருக்கும் பழியினின்றும் விலகிக்கொள்ள வேண்டியது உன் கடமையல்லவா?

பல:—அதில் ஒன்றும் சந்தேகமில்லை. நீ சொல்வதையெல்லாம் நானும் ஒப்புக்கொள்கிறேன். இது ருஜு ஆவதற்குமுன் நான் இதைப்பற்றி இளவரசியிடமும் பிரஸ்தாபிக்கமாட்டேன்.

ஜக:—நீ உன் சௌகரியப்படி நடந்துகொள். இதற்கிடையில் நான் சும்மா இருக்கப்போவதில்லை. என் வேலையை நான் கவனிக்கவேண்டும். அக்குழந்தையைப் பெற்றவள் இரங்கம்மாள் என்று நமக்குத் தெரிந்துவிட்டதென்றாலும் அதைப் பூர்த்தியாய் ருஜுப்பிப்பதற்குரிய ஆதார மொன்றும் அகப்படவில்லை. அவளுடைய சகோதரியாகிய அம்புஜம்தான் அக்குழந்தையின் பிரேதத்தை ஏரியில் எறிந்தாளென்பதும், அப்பிரேதம் இரங்கம்மாளின் துணியில்தான் சுற்றப்பட்டிருந்ததென்பதும் நிச்சயமாய்த் தெரிந்துவிட்டது. எனினும் எல்லா சந்தேகங்களும் நிவர்த்தியாய்விடவில்லை. அந்த

மூன்று சகோதரிகளின் வாயினாலேயே இதை வரவழைத்துவிட்டால் எனக்கு மிகத் திருப்தியாயிருக்கும். ஆனால் அவர்கள் எளிதில் விஷயத்தை வெளியிடக்கூடியவர்களல்லர். எவ்வளவு கஷ்டம் வந்தாலும் சமாளித்துக் கொள்வதென்று நிச்சயித்திருக்கின்றனர். நல்ல பேச்சுக்கும் பயமுறுத்தலுக்கும் அவர்கள் இணங்கமாட்டார்கள். ஆகவே எதிர்பாராத அபார பயம் அவர்களுக்கு உண்டாகும்படியான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி அதன்மூலம் உண்மை விஷயத்தை அவர்களிடமிருந்து கிரகிக்கவேண்டும். அதற்கும் நான் தக்க ஏற்பாடு செய்யாமலில்லை. அருவருக்கத் தக்க அப்பிரேதத்தை நான் டாக்டர் மணவாளனின் ரசாயன அறையில் பத்திரமாக வைத்திருப்பதன் காரணம் உனக்குத் தெரியுமா?

பல:—ஓ; தெரிகிறது. நீ அவர்களையே இங்கு எப்படியேனும் இழுக்கப்போகிறாய் என்பது விளங்குகிறது.

ஜக:—ஆம்; அதுதான் என் அபிப்பிராயம். நான் பெரிய நாயகிச் சீமாட்டியை இளவரசியினிடம் அனுப்பியதன் பயனாக நானே இளவரசியைப் பார்க்கக்கூடிய சமயம் வாய்த்திருக்குமாயின் அப்போதும் இளவரசியுடன் சில முக்கிய விஷயங்களைப் பேசிவிட்டுப் பிறகு அச்சகோதரிகளை எப்படியாவது கண்டு இன்றிரவு இந்த மணவாளன் வீட்டுக்கு வரும்படி ஏற்பாடு செய்யக் கருதியிருந்தேன். இப்போது நிலைமை வேறுவிதமாக மாறிவிட்டதென்றாலும் நீ என்னுடன் இவ்விஷயத்தில் ஒத்துழைக்க வேண்டும். இரங்கம்மாள், அம்புஜம், ஜானகி ஆகிய அம்மூன்று சகோதரிகளும் எப்படியாவது இன்றிரவு இங்கு வரும்படி செய்யவேண்டியது உன் கடமையாகும்.

பல:—நான் அப்படியே செய்கிறேன்.

ஜக:—அப்படியாயின் இன்று நடு இரவில் அப்பெண்கள் மூவரும் இவ்வீட்டுக்கு வந்து சேரவேண்டும். அப்போதுதான் பயமுறுத்தி ஏதேனும் விஷயத்தை அவர்களுடைய வாயிலிருந்து வரவழைக்கலாம்.

பல:—நடுராத்திரி தானே! அப்படியே ஆகட்டும். நான் அச்சகோதரிகளைப் பயமுறுத்தியோ நல்ல வார்த்தைகளைச் சொல்லியோ எப்படியாவது அவர்கள் இங்கு வரும்படி செய்துவிடுகிறேன். அதைப்பற்றி உனக்குக் கவலை வேண்டாம். நீ இதரவேலைகளைக் கவனி.

ஜக:—அப்படியானால் உன்னைத்தான் நம்பியிருக்கிறேன். இளவரசி ஒரு குழந்தையைப்பெற்றாள் என்னும் பழியினின்றும் இளவரசியைக் காப்பதற்கு அச்சகோதரிகளின் வாயினின்றும் சில உண்மைகளை வரவழைக்க வேண்டியது அவசியமாயிருப்பதால் அவர்கள் இன்றிரவு இங்கே வரத் தவறக்கூடாது.

பல:—நீ சொல்வதெல்லாம் எனக்குத் தெரிகிறது. ரொம்பவும் சந்தோஷமே. என்மீது நீ சுமத்தியிருக்கும் கடமையைச் செய்துமுடிப்பதற்காக நான் இதோ என் மாளிகை செல்கின்றேன்.

ஜக:—இளவரசியிடம் விஷயங்களைத் தெரிவிப்பதில் நீ சர்வ ஜாக்கிரதையுடன் இருக்கவேண்டும். எல்லாவற்றையும் ஒரே முறையில் அவளிடம் சொல்லிவிடுவதும் தவறு. கொஞ்சங் கொஞ்சமாகச் சங்கதிகளைச் சொல்லிக் கொண்டே இருக்கவேண்டும்.

பல:—இவ்விஷயத்திலும் நீ சொல்லும் முறையையே பின்பற்றுவேன். இளவரசி திடுக்கிட்டுப்போய் பொறுக்கமுடி

யாத மனக்கவலை யடைந்துவிடாம லிருக்கும்பொருட்டு நான் விஷயங்களைச் சிறிது சிறிதாகத்தான் அவளிடம் கூறுவேன். மேலும் அச்சகோதரிகளும் தங்களுக்கு ஏதோ பெரிய ஆபத்து வந்துவிட்டதெனப் பயப்படலாகாதல்லவா? பயந்துவிட்டால் அவர்கள் இங்குவர மறுப்பார்கள்.

பிறகு இருவரும் சற்றுநேரம் பேசியபின் பலராமன் இளவரசியின் மாளிகையை நோக்கிப் புறப்பட்டான். ஜகதீசன் தன்வேலையைக் கவனிக்கலானான்.

132 - வது அத்தியாயம்

ஜகதீசனை விட்டுப்பிரிந்த பலராமன் இளவரசியின் மாளிகைக்கு வந்துகொண்டிருக்கையில் வழியில் தனிப் பாதையொன்றில் யாரோ ஒருவர் மெல்லிய குரலோடு தன் பெயரைச்சொல்லிக் கூவுவதைக் கேட்டான். ஆகவே அவன் நாற்புறமும் சுற்றிப்பார்த்ததில் ஒரு மரத்தடியில் இராஜம்மாள் நின்றுகொண்டிருப்பதைக் கண்டான். எப்போதுமே பலராமனுக்கு அவளைக்கண்டால் பிடிக்காது. அவள் அவ்வளவு நல்ல குணநிசயத்தை யுடையவளாக இருக்கமுடியாது என்றே அவன் கருதியிருந்தான். இப்போது அவளைப்பற்றி ஜகதீசனும் கேவலமாகவும், அவளே இவ்வளவு தொல்லைகளுக்கும் காரணமென்றும் தெரிவித்துவிட்டதால் அவனுக்கு அவளிடம் அருவருப்பு ஏற்பட்டுவிட்டது. எனினும் அம்மூன்று சகோதரிகளும் அந்த இரவு மணவாளன் வீட்டுக்குச் செல்லும்படி தூண்டுவதற்கு இராஜம்மாள் தனக்குத் துணையாக இருப்பாளென்று கருதி அவள் உதவியை நாடியவனுய்த் தன் அருவருப்பைச் சிறி

தும் வெளியில் காட்டிக்கொள்ளாமல் அவள் அழைத்ததற்கு சந்தோஷப் படுபவன்போல் அவள் அருகில் சென்றான்.

ஆனால் இராஜம்மாள் அவனுடைய மனோநிலைமையை அவனுடைய முகக்குறிப்பாலேயே அறிந்துகொண்டு விட்டாள். முதலில் தன்னைக்கண்டதும் அருவருத்தான் என்பதையும், பிறகு வலுக்கட்டாயமாகச் சந்தோஷக்குறியை யடைந்து தன்னுடன் பேசவந்தான் என்பதையும் அவள் அறிந்துகொண்டுவிட்டாள். ஆகவே அவள் பலராமனிடம், ஏதோ அதிருப்திகரமானவிஷயம் சம்பவித்திருப்பதுபோல் காணப்படுகிறதே; என்ன சங்கதி?' என்றாள்.

பல:—ஆம்; சற்றும் திருப்தியடையக்கூடாத விஷயங்கள் நடந்திருக்கின்றன என்பது வாஸ்தவமே.

இரா:—நீ ஜகதீசனையும் பெரியநாயகிச் சீமாட்டியையும் மணவாளன் வீட்டில் சந்தித்துவிட்டு வருகிறாயோ ?

பல:—நான் பெரியநாயகிச் சீமாட்டியைப் பார்க்கவில்லை. ஆனால் ஜகதீசனைக் கண்டு பேசிக்கொண்டிருந்தது உண்மை. ஜகதீசன் பரிதிபுரத்திலிருக்கிறான் என்று உனக்கு எப்படித்தெரியும்?

இரா:—பலராமரே! நாம் நமது அரிய காலத்தை இங்கு கேள்வி கேட்டுக்கொண்டிருப்பதில் வீணாகக் கழிப்பதில் பயனில்லை. நடந்தது நடந்துவிட்டது. இனி அதைச் சமாளிப்பதில் நாம் முயற்சிசெய்வோம். நான் என்னா லியன்றவரையில் உனக்குத் துணைபுரிவேன். நீயும் இதை மறைக்க முயற்சிசெய்யவும்.

பல:—நானும் ஒளி மறைவின்றிப் பேசவேண்டுமென்றால் ஒன்றுதான் சொல்லமுடியும். அதாவது பல சம்பவங்கள் நிகழ்ந்துவிட்டிருக்கின்றன. எல்லாவற்றையும் ஜக

தீசன் பக்குவமாகக் கண்டு பிடித்துவிட்டிருக்கிருன். இன்னும் பாக்கியுள்ளதையும் நாங்கள் இருவருமாகச் சேர்ந்து கண்டுபிடித்து விஷயத்தை வெளிப்படுத்தி விடுவதெனத் தீர்மானித்திருக்கிறோம். அதில் உன்னைச் சேர்ந்த அம்மூன்று சகோதரிகள் தான் அதிகம் சிக்கிக்கொண்டிருக்கிருர்கள்.

இரா:—ஐயோ பாவம்! அவர்கள் எவ்வளவு இளமையுடனும் அழகுடனும் இருக்கிருர்களென்பதைக் கவனித்தேனும் அவர்கள் விஷயத்தில் சிறிது தாராளமாக நடந்து கொள்ளுங்கள். அவர்கள் செய்துவிட்ட குற்றத்துக்காக அவர்களே மனம்வருந்தி மன்னிப்புக் கேட்டுக் கொள்வதற்குரிய அவகாசத்தைக் கொடுங்கள். அவர்களை அடியோடு அழித்துவிடாமல் காப்பாற்றுங்கள்.

பல:—இப்போது நான் அதைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கத் தயாராக இல்லை. ஜகதீசனுடைய குணுதிசயம் உனக்குத் தெரியுமல்லவா?

இரா:—ஓ! அவனு? அவன் அன்பும் கருணையும், நற்குணங்களும் வாய்ந்தவன். ஆனுல் அவன் இவ்விஷயத்தில் எவ்வாறு நடந்துகொள்ளப் போகிருன் என்பது தெரியவில்லை. ஒருகால் அப்பெண்கள் சகிக்கமுடியாத பெருங் குற்றத்தைச் செய்துவிட்டார்களென்று அவன் கருதியிருக்கிருனே?

பல:—ஜகதீசன் இப்பெண்களை அநாவசியமாகத் துன்புறுத்தவோ, அழித்துவிடவோ இஷ்டப்படவில்லை யென்பதற் குதாரணமாக ஒரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். அதாவது அவன் அம்மூன்று சகோதரிகளையும் கூடுமானுல் இன்று நடு இரவே மணவாளன் வீட்டில் சந்திக்க விரும்புகின்ருன். அவர்களிட மிருந்தே

நேரில் அவர்கள் செய்தகுற்றத்தை அறிந்துகொண்டு அதை மறைத்துவிட எவ்வாறு நடந்துகொள்ளலா மென்பது பற்றி யோசிக்க விரும்புகிறுன். ஆகவே அவர்களை எப்படியாவது அழைத்துவரும்படி எனக்குக் கட்டளையிட்டிருக்கிறுன்.

இரா:—(உடனே எந்தக் காரியமும் நடக்காததுபற்றி சந்தோஷங் கொண்டு) உனக்காக நான் அப்பெண்களிடம் இவ்விஷயத்தைச் சொல்லட்டுமா? அல்லது நீயே அவர்களைச் சந்தித்துப் பேசிக்கொள்கிறுயா?

பல:—ஆம்; நானே அவர்களைச் சந்தித்துப் பேசுவதுதான் நன்மையாகும். இப்போது பகல் மூன்றுமணி; மாலை ஐந்து மணிக்கு என்னை ஏரியின்கரையில் சந்திக்கும்படி அப்பெண்களிடம் சொல்லி ஏற்பாடுசெய். ஏனெனின் அப்போதுதான் நான் அவர்களுடன் பேசுவதைப் பலரும் அறியமாட்டார்கள்.

இரா:—நீ கூறிய விஷயங்களை நான் அப்பெண்களிடம் கூறி அவர்கள் சரியாக ஐந்துமணிக்கு ஏரிக்கரைக்கு வரும்படி செய்வேன். இப்போது நீ கூறியதிலிருந்து இப்போது இதைப்பற்றி நமது அன்புள்ள இளவரசியிடம் சொல்லி அவள் மனதைப் புண்படுத்துவதாக உனக்கு உத்தேசமில்லையென்று தோன்றுகிறதே; அது சரிதானு?

பல:—(கோபத்துடன்) இம்மாதிரியெல்லாம் வஞ்சனையுடன் பேசாதே. உனக்கே அல்லது அந்த மூன்று சகோதரிகளுக்கோ இளவரசியிடம் சிறிதும் அன்போ இரக்கமோ இல்லை என்பதை நான் நன்கு அறிவேன். அப்படியிருக்கையில் நமது அன்புள்ள இளவரசி என்று கூறுகிறுயே. இது வஞ்சனை அல்லவா? நான் எல்லா

விஷயங்களையும் இளவரசியிடம் கூறிவிடமாட்டேன். எவ்வளவுதூரம் ஆரம்பத்தில் சொல்லலாமோ அவ்வளவு தூரம் சொல்லிவைத்து மற்ற விஷயங்களைச் சிறுகச் சிறுகச்சொல்வேன். அந்த மூன்று சகோதரிகளும் என்பேச்சைக் கேட்பார்களானால் அவர்களைப்பற்றி ஒன்றும் தற்சமயம் இளவரசியிடம் கூறமாட்டேன்.

இரா:—இவ்வாறு நீ செய்வதுபற்றி எனக்கு மிகவும் சந்தோஷமே. ஆனால் உள்ளநிலைமையைப்பற்றி ஒன்றும் விவரமாகச் சொல்லமாட்டேன் என்கிறாயே.

பல:—இப்போது இதற்குமேல் ஒன்றும் சொல்லமுடியாது. நாம் இருவரும் மாளிகைக்குச் செல்வோம். ஆனால் நீ வேறுவழியாகவும் நான் வேறுவழியாகயும் செல்ல வேண்டும்.

அதன் பிறகு இருவரும் வெவ்வேறான வழிகளின் மார்க்கமாக இளவரசியின் மாளிகைக்குச் சென்றார்கள். இப்போது நாம் மாளிகைக்குச்சென்ற பலராமனைப்பற்றிக் கவனிப்போம். அவன் உடனே இளவரசியைச் சந்திக்கச்சென்றான். அவன் அவளிடம் வேலையில் அமர்ந்தபின்னர் அவளைத் தனியாக ஒரு அறையில் அவன் சந்தித்தது இதுதான் முதல் முறையாகும். அந்த அறையின் ஜன்னல் கதவு திறந்திருந்ததால் அருகிலுள்ள ஏரி நன்றாகத் தெரிந்துகொண்டிருந்தது. மாலை நேரத்தில் அங்குள்ள இயற்கை அழகை அவள் பார்த்துக்கொண்டிருந்தாள். ஆனால் அவள் கவனம் அங்கு செல்லவில்லை. ஏனெனின், காலையில் நடந்த சம்பவமே அவள் மனதைக் கலக்கிவிட்டிருந்தது. அவள் பலராமனைப் பார்த்ததும், 'ஆ! பலராமரே! நீ திரும்பி வந்ததைக்காண நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். நீ சென்றபிறகு நான் என் அன்புள்ள குமாரி சண்பகவல்லிக்கும், மைத்துனி சுந்த

ராங்கிக்கும் நீண்ட இருகடிதங்களை எழுதிவிட்டுத் தனியாக விஷயங்களைச் சிந்திக்கும்பொருட்டு இங்கே வந்தேன். சிந்தனை செய்வதென்றால் ஏதேனும் துக்க சம்பவங்களும் ஞாபகத்துக்கு வருமல்லவா? அது கிடக்கட்டும். நீ செய்த வேலைகள் என்ன? யார் யாரைச் சந்தித்தாய்? உடனே விவரங்களைச்சொல்' என்று மிக ஆவலுடன் கேட்டாள்.

பல:—நான் அவ்வளவு அவசரமான கட்டளைகளுக்குக் கீழ்ப்படியக்கூடிய நிலைமையில் இல்லை. நான் பலவிஷயங்களை அறிந்திருக்கிறேனென்றாலும் நாளை காலைவரை ஒன்றும் நிச்சயமாகச் சொல்லமுடியாதவனு யிருக்கிறேன். கேள்விப்பட்டிருக்கும் அரைகுறையான விஷயத்தையும் இப்போது உங்களிடம் சொல்வது அவ்வளவு புத்திசாலித்தனமானதென எனக்குத் தோன்றவில்லை.

இளவரசி:—ஆயினும் எனக்கேதேனும் ஆபத்து வரப்போகிறதா என்பதைமட்டும் சொல்லக்கூடாதா?

பல:—இல்லை. உங்களுக்கு எத்தகைய ஆபத்தும் வாராதென்று நான் உறுதியாகவும் தைரியத்துடனும் கூறுவேன்.

இள:—அப்படியானால் எனக்குச் சிறிது அமைதி ஏற்படும். இப்போது எவ்வளவுதூரம் சொல்ல முடியுமோ அவ்வளவேனும் சொல்லலாம்; அல்லது சொல்வதற்கே சந்தர்ப்பமில்லையென்றாலும் உன் இஷ்டப்படியே நாளைவரையில் காத்திருக்கிறேன். எப்படியாயினும் நீ என் நண்பன் ஆதலின் நான் உன்பால் அதிக நம்பிக்கை வைக்கிறேன்.

பல:—இளவரசியே! நீங்கள் என்னிடம் வைக்கும் நம்பிக்கையை இழந்துவிடும்படி நான் எக்காலும் நடந்துகொள்ளமாட்டே னென்பதை நிச்சயமாக நம்புங்கள்.

அவன் அவ்வாறு கூறியபோது இளவரசி ஒரு பெரிய பெருமூச்சுவிட்டதைக் கவனித்தான். அவள் அடக்கமுடியாத கவலையுடனும் விசாரத்துடனும் ஆவலுடனும் இருந்ததால் சொற்ப நேரத்துக்குமுன் தான் சொன்னதையும் மறந்து பலராமனைப் பார்த்து, 'அப்படியானால் நீ பெரியநாயகிச் சீமாட்டியை மீண்டும் பார்த்தாயா? அல்லது ஜகதீசன் என்பவனையே பார்த்தாயா?' என்று மிக பரபரப்புடன் கேட்டாள்.

அவளுடைய மனோநிலைமையை ஒருவாறு அறிந்து கொண்ட பலராமன், ஏதேனும் சில விஷயங்களை வெளியிடுவதே நலமெனக் கருதி, 'ஆம்; இளவரசியே! நான் ஜகதீசனைக்கண்டேன். அவ்வளவு தைரியமும், நற்குணமும்வாய்ந்த கனவான் வேறொருவரும் இவ்வுலகில் இருக்க முடியாதென உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். அவனைப்பற்றி அவதூறாகச் சொல்லப்பட்ட விஷயங்களெல்லாம் அபாரமான பொய் என்பதில் சந்தேகமில்லை' என்றான்.

இள:—அப்படியானால் என் தோழிகளான அம்மூன்று சகோதரிகளும், அவர்களுக்குத் துணையாக இருக்கும் இராஜம்மாளும் என்னை ஏமாற்றி விட்டார்களென்றே நினைக்கிறேன்.

பல:—நீங்கள் பலவிதத்தில் அவர்களால் ஏமாற்றப்பட்டீர்கள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. எனினும் ஏமாற்றியவர்களுக்கு நெருக்கடியானகாலம் வந்துவிட்டது. அந்த ஜகதீசனுக்கு நாம் வந்தனம் செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். அவன் உங்கள் எதிரிகளை அடக்கிப்போடுவான் என்பதில் சற்றும் சந்தேகமில்லை. இதற்குமேல் இப்போது நான் ஒன்றும் சொல்லமுடியாது. நீங்களும் ஏதோ கவலைப்படுகிறவர்போலும் சந்தேகப்படுகிறவர்

போலும் நடந்துகொள்ளாமல் பழையபடியே வேடிக்கையாகக் காலத்தைக் கழியுங்கள். நாங்கள் இனி நடக்கவேண்டியதைப் பார்த்துக்கொள்கிறோம்.

இள:—எல்லா வகைகளிலும் நீ இப்போது கூறியது போலவே நான் நடந்துகொள்வேன் என்பது நிச்சயம்.

உடனே பலராமன் இளவரசிக்கு வணக்கம் செலுத்திவிட்டு அவளைக் கடைக்கண்ணாலும் பாராமல் அவ்வறையை விட்டு வெளிச்சென்றான். பிறகு அவன் நேராக இரண்டாவது மாடியிலுள்ள வண்ணாத்தி சுவர்ணத்தின் அறைக்குச் சென்றான். அங்கு அவள் பகலெல்லாம் உழைத்த உழைப்பால் களைத்துப்போய் சூடான பானவகைகளை அருந்திக்கொண்டு ஓய் வெடுத்துக்கொண்டிருந்தாள். அவள் இளவரசியின் பிரதம காரியஸ்தனான பலராமன் தன் அறையில் பிரவேசித்ததைக் கண்டதும் மரியாதையாக எழுந்து நின்று அவனுக்கும் சிறிது பானவகைகளைக் கொடுக்கப் பிரயத்தனப்பட்டாள். அப்போது பலராமன் மிக்க அதிகார தோரணையில், 'மாதே! நீ எனக்காக எப்படிப்பட்ட சிரமமும் எடுக்கவேண்டாம். இப்போது நான் கேட்கப்போகும் கேள்விகளுக்கெல்லாம் சிறிதும் மறைக்காமல் உனக்குத் தெரிந்த உண்மையைக் கூறிக்கொண்டுவா' என்று கூறினான்.

பலராமன் இவ்வாறு கூறியதைக்கேட்ட வண்ணாத்தி சுவர்ணம் திடுக்கிட்டுப்போனாள். பலராமனோ அவள் உண்மையைச் சொல்லிவிட்டால் அவளுக்கு எத்தகைய ஆபத்தும் வராமல் பார்த்துக்கொள்வதாகவும் அவ்வாறு உண்மையைச் சொல்லாமல் ஏமாற்றவோ பொய்சொல்லவோ நினைத்தால் அவளைத் தக்கபடி தண்டிக்கப்போவதாகவும் கூறவே அவள் பயந்துபோய், சில வாரங்களுக்குமுன் ஒருநாள் இரவு அம் மாளிகையில் நடைபெற்ற சம்பவத்தின் சம்பந்தமாகவே

விஷயங்களைத் தெரிந்துகொள்ள பலராமன் வந்திருக்க வேண்டுமென்று நினைத்து அவனுடைய காலில்விழுந்து நமஸ்கரித்து, 'ஐயா! அன்றிரவு நான் அவ்வாறு நடந்து கொண்டதற்கு எனக்கு நமது இளவரசியின்மீது இருக்கும் அன்பும் அனுதாபமுமே காரணமாகும். அவளுடைய மானத்தைக் காக்கவே நான் அவ்வளவு சிரமத்தையும் ஏற்க முன் வந்தேன்,' என்று அச்சத்துடனும் நடுக்கத்துடனும் கூறினாள்.

ஆகவே பலராமன் அவளை எழுந்து தன் ஆசனத்தில் உட்காரச் சொல்லி அவளுக்குத் தெரிந்த விஷயங்களைக் கூறும்படி சொன்னான். உடனே அவள் அழுதுகொண்டும் பெருமூச்சு விட்டுக்கொண்டும் தான் தன் அறையின் வாயிற்படியில் மறைவாக நின்றுகொண்டு நடு இரவில் பலராமன் ரகசியமாக அவ்வழியே இளவரசியின் அறைக்குச் செல்வதைக் கண்டதெல்லாம் இராஜம்மாளின் தூண்டுதலினாலேயே என்றும், அதைப் பார்த்துவைத்து அதற்கு ஒரு சாட்சியமாக இருக்கும்படி தன்னை அந்த இராஜம்மாள் கேட்டுக்கொண்டதாலேயே அவ்வாறு பார்க்க நேரிட்டதென்றும் கூறினாள்.

இதைக் கேட்டதும் பலராமன் ஆச்சரியமடைந்தான். ஏனெனின் அவ்வழியே ஒருநாள் இரவேனும் தான் சென்றதில்லையென்பதை அவன் அறிவானன்றோ? அவன் மேலும் மேலும் பல கேள்விகளை சுவர்ணத்தினிடம் கேட்டபோதெல்லாம் அவள் மீண்டும் மீண்டும் அதையே வற்புறுத்தித் தக்க ஆதாரங்களுடன் கூறியதால் இவ்விஷயத்தில் தனக்கும் ஜகதீசனுக்கும் தெரியாத ஏதோ ஒருரகசியம் நடைபெற்றிருக்க வேண்டுமென்றும், இளவரசியின்மீதும் பலராமன்மீதும் பழியைச் சுமத்துவதற்கு அச்சகோதரிகள் யாரோ வேறு

ஒரு ஆடவனை, தன்னைப்போல் ஆடை அணியச்செய்து அழைத்து வந்திருக்க வேண்டுமென்றும் யோசித்தான். மேலும் அவன் வண்ணாத்தி சுவர்ணத்தை மற்றும் பல கேள்விகள் கேட்டதிலிருந்து யாரோ வேறு ஒரு ஆள் தன்னைப்போல் வேடமணிந்து உள்ளே பிரவேசித்திருக்க வேண்டுமென்று நிச்சயித்தான். ஆனால் இவன் இவ்வாறு பல கேள்விகள் கேட்டதாலும், சுவர்ணத்துக்குச் சந்தேகம் உண்டாகவே அவள் சிந்தித்துப் பார்த்ததில் அப்போது இராக்காலத்தில் தான் கண்டமனிதன் பலராமனைவிடச் சிறிது குள்ளமாக இருந்தான் என்பது ஞாபகத்துக்கு வந்தது. ஆனால் வண்ணாத்தி சுவர்ணம் சொன்ன மற்றொரு விஷயத்திலிருந்து பலராமனுக்கு ஆச்சரியம் உண்டாய்விட்டது. அதாவது இராக்காலங்களில் பலராமனைப்போல் வேடமணிந்த மனிதன் உள்ளே பிரவேசிக்கும்போது இளவரசியே அவனைத் தன் அறையின் முன்னின்று வரவேற்றதைத் தான் கண்டதாக சுவர்ணம் கூறியதேயாகும். ஆனால் அவ்வாறு வரவேற்றவள் இளவரசிதானென்று சுவர்ணத்துக்கு எவ்வாறு நிச்சயமாகத் தெரியுமெனக் கேட்டபோது அவள், அவ்வாறு புதுமனிதனை வரவேற்ற அம்மாது இளவரசிக்கு மட்டுமே உரிய மேலாடையை அணிந்து கொண்டிருந்ததால் அதில் தனக்குச் சந்தேகம் ஏற்படக் காரணமில்லை என்று கூறினாள்.

இதைக்கேட்டதும் பலராமனுக்கு அடக்கமுடியாத கோபம் பிறந்துவிட்டது. இளவரசியின் மானத்தைக் கெடுக்கும் பொருட்டும், அவளை அழித்து விடும்பொருட்டும் சூழ்ச்சி செய்துவரும் அம்மூன்று சகோதரிகளும் அளவுக்கு மிஞ்சிய வஞ்சனையுடன் நடந்துகொண்டிருக்கிறார்களென்றும் தன்னைப்போலவும், இளவரசியைப்போலவும் வேடமணிந்து அந்த சுவர்ணம் இளவரசியே கற்பினின்றும் தவறியவள்

என்று நம்பும்படி செய்திருப்பதாகவும், நினைத்தான். ஆகவே உடனே மூன்று சகோதரிகளையும், இராஜம்மாளை யும் பரிதிபுரம் போலீஸ் அதிகாரிகளிடம் ஒப்படைத்துவிட லாமா என்று கருதும்படி அவ்வளவு கோபம் வந்துவிட்டது. ஆனால் இவ்விஷயங்களை வெளியிடுவதில் எவ்வளவு ஜாக்கிர தையாக இருக்கவேண்டு மென்பதுபற்றி ஜகதீசன் சொல்லி யுள்ளதை ஞாபகத்திற்கொண்டு தன் கோபத்தை அடக்கிக் கொண்டான். வண்ணாத்தி சுவர்ணம் இச்சதியாலோசனையில் கலந்தவளல்ல வென்பதையும், மூன்று சகோதரிகளாலும் இராஜம்மாளாலும் அவள் ஏமாற்றப்பட்டிருக்கிறாளென்ப தையும் நன்கு அறிந்துகொண்ட பலராமன் உண்மையில் நடந்துள்ள விஷயங்களை அவளுக்கு அறிவித்து அவளுடைய சந்தேகங்களையெல்லாம் நிவர்த்திசெய்தான்.

அப்போது அவன் சுவர்ணம்பாளைப் பார்த்து, 'மாதே! நான் இங்கு வரும்போது, நீயும் இச்சதியாலோசனையில் கலந்தவளே என்று நினைத்து அதனால் கோபமடைந்தவனாக வந்தேன். ஆனால் உன்னுடன் பேசியதிலிருந்து நீ அதில் சம் பந்தப்படவில்லை என்பதையும் நீ ஏமாற்றப்பட்டிருக்கிறாய் என்பதையும் அறிந்தேன். இச்சதியாலோசனை இளவரசியை அழித்துவிட வேண்டுமென்னும் எண்ணத்தாலேயே நடந்து வருகிறது. நீ என்னையோ இளவரசியையோ நீ கருதுகிறபடி இராக்காலங்களில் கண்டதில்லை. ஆனால் வேறு யாரோ ஒரு வன் என்னைப்போலவும், ஒருத்தி இளவரசியைப்போலவும் வேடம் அணிந்திருக்கிறார்கள். இதுமட்டுமல்ல. அன்று இரவு நீ எடுத்துச்சென்ற குழந்தையின் பிரேதத்தைப் பிர சவித்தவளும் இளவரசியல்லவென்பதும், இரங்கம்மாள் தான் பிரசவித்தாள் என்பதும் ருஜுவாகிவிட்டது. அன்று இங்கிருந்து பல மைல்களுக்கப்பாலுள்ள சிற்றூர் ஓட்டலில் கண்ட இரு கனவான்களாகிய கர்னல் மாரப்பனும் குமார

வேல் பிரபுவுமே முறையே அம்புஜம், ஜானகி ஆகியவர்களின் கள்ளக் காதலர்களென்பதும் தெளிவாகிவிட்டது. அவ்விருவர்தான் இராக்காலங்களில் என்னைப்போல் வேடமணியச் செய்து உள்ளே அழைக்து வரப்பட்டிருக்கின்றனர் என்பதிலும் சந்தேகமில்லை,' என்று கூறி விஷயங்களை விவரமாக அறிவித்தான்.

இதையெல்லாம் கேட்ட வண்ணாத்தி சுவர்ணம் உண்மையில் நிகழ்ந்துள்ள சம்பவங்களைக் கண்டு ஆச்சரியமடைந்தாள். ஆனால் பயப்படவில்லை. ஏனெனின், அவள் அச்சதியாலோசனையில் கலந்து கொள்ளவில்லையென்றும், ஏமாற்றப்பட்டிருக்கிறாளென்றும், உண்மையைச் சொல்லிவிட்டதால் அவளுக்கு எத்தகைய ஆபத்தும் வாராதென்றும் பலராமன் அறிவித்துவிட்டதாலேயே. மேலும் அவள் இவ்விஷயங்களையெல்லாம் வெளியிடாமல் இன்னும் சொற்பகாலம்வரை இரகசியமாக வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் அவன் கூறியிருந்தான். சுவர்ணமும் அவ்வாறே செய்வதாக வாக்குறுதியளித்தாள். ஆகவே பலராமன் அவ்வறையைவிட்டுப் புறப்பட்டான்.

இப்போது நாம் அன்றுபகல் தனிப்பாதையில் பலராமனைச் சந்தித்த பின்னர் இராஜம்மாள் என்னசெய்தாள் என்பதைக் கவனிப்போம். அவள் இரண்டுமணி நேரத்துக்கு முன்னர் அம்மூன்று சகோதரிகளையும் எந்த அறையில் எந்த நிலைமையில் விட்டுச்சென்றாளோ அதே நிலைமையில் கண்டாள். ஏனெனின் அவர்கள் எதை எதையே சிந்தித்துக் கொண்டே அதே அறையில் இராஜம்மாள் வருமட்டும் காத்திருந்தார்கள். இராஜம்மாள் அவ்வறையில் நுழைந்ததும் அச்சகோதரிகள் மூவரும் மிக்க ஆவலுடன் அவளைச் சூழ்ந்து கொண்டு என்ன சங்கதி என்பதை விசாரிக்கலானார்கள்.

அதற்கு அவள், "பெண்களே! நிதானியுங்கள். நமக்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்தோ மிகப் பெரிதென்பதில் ஆட்சேபமில்லை. ஆயினும் அதைச் சமாளித்துக்கொள்ளவும் கூடும்," என்றாள். இதனால் இவ்விளமங்கையர் மூவரும் ஒருவாறு ஆறுத லடைந்தார்களென்றாலும் மிகப் பெரிய ஆபத்து என்று அவள் சொன்னதால் அவர்களுக்கு ஏற்பட்ட அச்சம் மட்டும் சிறிதும் குறையவில்லை. மேலும் இராஜம்மாள் மணவாளனுடன் பேசியதால் அறிந்த விஷயங்களையெல்லாம் அப்பெண்களிடம் சொல்லும்போது அவர்கள் அச்சமென்னும் மகா பெரிய சமுத்திரத்தில் மூழ்கிவிட்டார்களென்றே கூறவேண்டும். ஜகதீசன் எப்படி அவர்களுடைய சூழ்ச்சிகளை ஒன்றின்பின் ஒன்றாகக் கண்டுபிடித்து வருகிறான் என்பதை இராஜம்மாள் கூறியபோது, எப்படி அவன் குழந்தையின் பிரேதத்தை ஏரியிலிருந்து கொண்டுவந்து மணவாளனுடைய இரசாயன அறையில் வைத்திருக்கிறானென்பதைச் சொன்னசமயம், பாவம்! இரங்கம்மாளென்னும் மூத்த சகோதரியின் உடல் முழுதும் அச்சத்தால் நடுங்கியது.

மேலும் இராஜம்மாள் அச்சகோதரிகளிடம், "பெண்களே! இதனால் இப்போது நமக்கு பெரிய ஆபத்து ஏற்பட்டிருக்கிறதென்பதில் சந்தேகமில்லை யல்லவா? ஆனால் அதிலிருந்து எளிதில் விலகுவதற்கு ஒரு சிறந்தவழி இருக்கிறது. பலராமன் டாக்டர் மணவாளன் வீட்டில் ஜகதீசனைச் சந்தித்துவிட்டுத் திரும்பி மாளிகைக்கு வரும்வழியில் நான் அவனைச் சந்தித்துப்பேசினேன். அவன் எல்லாவற்றையும் தெரிந்துகொண்டிருக்கிறான். அவனோ அல்லது ஜகதீசனோ இவ்விஷயத்தில் கடுமையான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வதாக உத்தேசிக்கவில்லை யென்பது நன்கு தெரிகிறது. அவர்கள் எல்லா விஷயங்களையும் நன்றாக விசாரித்துத்

தெரிந்துகொண்டு பிறகு அதைப் பிறர் எதிர்க்கமுடியாதபடி வெளிப்படுத்திவிட வேண்டுமென்று கருதுகின்றனர். ஆகவே இடையிலுள்ள இன்றிரவை நாம் நமது நன்மைக்குப் பயன் படுத்திக் கொள்ளவேண்டும்,'' என்றாள்.

அதற்கு அப்பெண்கள், "அப்படியானால் நாளையதினம் நமது சங்கதிகளெல்லாம் வெளிப்பட்டுவிடுமோ? அப்படி யானால் எங்கேனும் ஓடி ஒளியவேண்டியதுதான்'' என்றார் கள். அப்போது இராஜம்மாள் கோபத்துடன், "முட்டாள் பெண்களே! எப்படி ஓடிப்போக முடியும்'' பிரயாண அனு மதிச்சீட்டு பெற்றுக்கொள்ளாமல் வெளியேறினால் சந்தேகத் தின்மீது நம்மைக் கைதுசெய்துவிட மாட்டார்களா? ஆத லின் ஓடிப்போவது முடியாதகாரியம். இங்கிருந்துகொண்டே ஆபத்தை எதிர்த்து நிற்கவேண்டும்,'' என்று கூறினாள். அதற்கு ஜானகி, "நமக்குச் சாவகாசமும் இல்லையே. இன் னும் சொற்பமணி நேரந்தானே இருக்கிறது'' என்றாள். அப் போது இராஜம்மாள், "அந்தச் சொற்பகாலத்துக்குள் எவ் வளவு காரியத்தை வேண்டுமாயினும் செய்யலாம், உங்கள் மூவரையும் மாலை ஐந்துமணிக்கு ஏரிக்கரையிலுள்ள பழைய துறைமுகக் கட்டடத்துக்கருகில் சந்திக்க பலராமன் விரும்பு கின்றான். நீங்கள் தவறாமல் போகவேண்டும். அவன் மீண் டும் இரவில் நீங்கள் ஜகதீசனைச் சந்திக்கச் செல்லவேண்டு மென்று கூறுவான். அதற்கும் நீங்கள் உடன்படவேண் டும்,'' என்று அதிகார தோரணையில் கூறினாள்.

அதைக்கேட்ட இரங்கம்மாள், "என்ன? ஜகதீசனைப் பார்ப்பதா? அவனுக்கு நம் விஷயங்களெல்லாம் தெரிந்திருக் கிறதே! நான் ஒரு குழந்தையைத் திருட்டுத்தனமாகப் பிர சவித்தேன் என்பதையும் அவன் அறிவானல்லவா? அக் குழந்தையின் பிரேதமும் அவனிடம் இருக்கிறதே! நான் எப்படிச்செல்வது?'' என்று துக்கத்துடன் கேட்டாள்.

அதற்கு இராஜம்மாள் மிக்க ஆத்திரத்துடன், "ஓ! உனக்கும் வெட்கமிருக்கிறதா? அவனை வசப்படுத்திக்கொள்ள நீ தானே உன்னாலான முயற்சியையெல்லாம் செய்தாய்" என்று அதட்டிக் கேட்டாள். அப்போது இரங்கம்மாள் அவமானத்துடன், 'போதும்; போதும்; நாங்கள் ஜகதீசனைச் சந்திக்க வேண்டியது அவசியமென நீ கருதினால் நாங்கள் போகத் தயார்' என்று விடையளித்தாள்.

அப்போது இராஜம்மாள், "ஆம்; அவசியம்தான். ஏன் அவசியமென்றால் நீங்கள் அவனைச் சந்திப்பதால் மூன்று கொலைகள் நடக்கவேண்டிய அவசியத்தைத் தடுக்கலாம்," என்று கூறினாள். அதைக்கேட்ட அம்புஜம் ஆச்சர்யத்துடன், "என்ன அர்த்தத்தில் கூறுகிறாய்" என்று கேட்டாள். ஏனெனின், இராஜம்மாள், பலராமனையும் சேர்த்து மூன்றுபேர் என்றுசொல்லியிருக்கவேண்டுமென அம்புஜம் கருதினாள். இப்போது நமக்கு மூன்று விரோதிகள் இருக்கிறார்கள். அவர்களுக்குத்தான் நாம் பயப்படவேண்டியதாக இருக்கிறது. இன்று காலைவரை ஜகதீசனும் பெரியநாயகிச் சீமாட்டியும்தான் நமது விரோதிகளாயிருந்தார்கள். பகல் முதல் பலராமனும் நம் விரோதிகளில் ஒருவனாய்விட்டான். ஜகதீசன் நம்மைக் காட்டிக்கொடாமல் பெருந்தன்மையுடன் நடந்துகொள்வதாக இருந்தால் நாம் அம்மூவரையும் கொலை செய்யவேண்டிய அவசியமில்லை. ஆனால் நீங்கள் முதலில் பலராமனையும் பிறகு ஜகதீசனையும் சந்தித்தபின்னர், நமக்கு விமோசன மில்லையென்று தெரிந்தால் அம்மூவரும் இன்றிரவே இறக்கவேண்டியதே," என்று கூறினாள்.

இதைக்கேட்ட பெண்கள் மூவரும் உச்சந் தலைமுதல் உள்ளங்கால் வரை நடுங்கினார்கள். இராஜம்மாள் பலராமனுடைய பெயரையும் சேர்த்துவிட்டதால் மற்ற சகோதரி

களைவிட அம்புஜம்தான் அதிகம் வருத்தப்பட்டாள். ஆனால் ஒன்றும்சொல்லாமல் துக்கக்கடலில் ஆழ்ந்தவளாய் மௌனக் கடலில் ஆழ்ந்துவிட்டாள். எனினும் மூத்தவளாகிய இரங் கம்மாள் ஒருவாறு சமாளித்துக்கொண்டு, "அவர்களைக்கொல் லும் விஷயத்தில் டாக்டர் மணவாளனுடன் நீ ஒருவிதமான முடிவு செய்துவிட்டு வந்துவிட்டாயோ?" என்று இராஜம் மாளைக் கேட்டாள். அப்போது இராஜம்மாள், "ஆம்; ஜக தீசனும் பெரியநாயகிச் சீமாட்டியும் இன்று இரவு சாக வேண்டுமென்று சொல்லிவிட்டு வந்தேன். ஆனால் அப்போது எனக்கு ஜகதீசன் உங்களைச் சந்திக்கப்போகிறான் என்னும் சங்கதி தெரியாது. அவன் நடந்துகொள்ளும் விதத்தைப் பார்த்தால் அவன் இரக்கமுள்ளவனாக இருப்பதாகவே தெரி கிறது. அப்படியானால் அவன் சாகவேண்டிய அவசியமில்லை. ஆதலின் இன்றிரவு நீங்கள் ஜகதீசனைச் சந்தித்தபிறகு, அவன் நடத்தையிலிருந்து அவனை விட்டுவிடுவது நல்லதா? அல்லது கொல்வதே சரியா என்று இரங்கம்மாள்! நீ தீர் மானித்து அதற்கேற்றபடி அவன் விடப்படலாமெனத் தோன்றினால் நீ எப்படியாவது மணவாளனைச் சந்தித்து அவ னிடம் அறிவித்துவிட வேண்டும்" என்று கூறினாள்.

இரங்:—நீ கூறுவதைப் பார்த்தால் நாங்கள் இன்றிரவு ஜக தீசனைச் சந்திப்பது நிச்சயமென்றே தெரிகிறதே.

இரா:—பலராமன் சொன்னதிலிருந்து நான் அவ்வாறே நினைக்கிறேன். அவன் உங்களிடம் விவரமாகக் கூறு வான். அவனிடமிருந்து சங்கதிகளைத் தெரிந்துகொண்ட பின்னர் நாம் எவ்வாறு நடந்துகொள்வதென்பதில் ஒரு முடிவுக்கு வரலாம். எனினும் நாம் எது செய்வதா யிருந்தாலும் தைரியமாகவும் உறுதியாகவும் அதைச் செய்துமுடிக்கவேண்டும். நாம் சிறைக்குச் சென்று

கஷ்டப்படுவதைவிட துணிந்து ஏதேனுமொரு காரியத்தைச்செய்துவிட்டுத் தப்பித்துக்கொள்வதே சாமர்த்தியமாகும். ஆனால் பலராமன் முதலியவர்களைக் கொல்லவேண்டுமென்பதில் உங்களில் சிலருக்குக் கஷ்டமாக இருக்கிறது. பலராமன் என்று சொல்லும்போது அம்புஜம் மயக்கமடைந்தாள்.

அவள் சொன்ன கடைசி வார்த்தைமட்டும் இரங்கம்மாள் தவிர மற்றவர்களுக்குக் கேட்காதபடி மெதுவாகச் சொன்னாள். ஆகவே இரங்கம்மாளும், "ஆம்; பலராமனை அம்புஜம் நேசிக்கின்றாள் என்பது உண்மையே. அதனால் தான் அவள் மயக்கமடைந்தாள்," என்றாள். அப்போது இராஜம்மாள், "அப்படியானால் அம்புஜம் பலராமனை மயக்கி விடுவதாக இருந்தால் அதனால் நமது காரியத்தைச் சாதித்துக் கொள்ளலாம். நம்மை ஜகதீசனும் மன்னித்துவிடும்படி தூண்டச்செய்யலாம்" என்று யோசனை கூறினாள். உடனே இரங்கம்மாளும் இதுவே சமயமெனக்கொண்டு, "ஆம்; பலராமனை அம்புஜம் மயக்கி அவனை அவள் தன் வலையில் சிக்கும்படி செய்வதே முறையாகும். அவனும் சாதாரண மனிதன் தானே. ஒரு அழகிய வாலிபப்பெண்ணிடம் மயங்காமலிருக்கமுடியுமா? ஜகதீசனைப்போல் இவனும் சந்நியாசியாக இருப்பானா?" என்றாள்.

இரா:—"அப்படியானால் என்ன செய்யவேண்டுமென்பதைச் சொல்கிறேன் கேள். நீங்கள் மூவரும் ஏரிக்கரைக்குச் சரியாக ஐந்து மணிக்குச்சென்று பலராமனைச் சந்திக்க வேண்டும். அவன் உங்களிடம் எதைச்சொல்ல விரும்புகிறானோ அதைச் சொல்லி முடித்தபிறகு ஏதேனும் ஒரு காரணம் காட்டி நீயும் ஜானகியும் அவ்விடத்தை விட்டு விலகி அம்புஜத்தைமட்டும் அவனுடன் தனியே விட்டு

விடவேண்டும். நீ இவ்வாறு செய்யப்போவதாக முன்னுடியாக அவளிடம் கூறிவிடலாம். அதற்கு அவளும் சம்மதமும் சந்தோஷமும் அடைவாள்'' என்று கூறினுள்.

இரங்கம்மாளும் இதற்குச் சம்மதப்பட்டாள். பலராமனைச் சந்திக்கவேண்டிய வேளை சமீபித்துவிட்டதால் அம் மூவரும் அழகாக அலங்கரித்துக்கொள்ளச் சென்றுர்கள்.

133 - வது அத்தியாயம்

சரியாக மாலை ஐந்து மணிக்கு பலராமன் ஏரிக்கரையிலுள்ள பழைய துறைமுகக் கட்டடத்துக் கருகில் சென்று மூன்று சகோதரிகளையும் சந்திக்கும் பொருட்டுச் சென்றுன். ஆனுல் அச்சகோதரிகள் அவனுக்கும் முன்னரே அங்கு சென்று காத்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் முகம் வெளுத்துக் காணப்பட்டது. அவன் அருகில் சென்றதும் அவர்கள் அதிகமாக அச்சமும் கவலையும் அடைந்தனர். அதை அவர்கள் வெளிக்குக் காண்பியாமல் மறைத்துக் கொள்ளச் செய்த முயற்சிகளெல்லாம் வீணுயிற்று. பலராமனுக்கு அவர்களிடம் இரக்கமென்பது சொற்பமேனும் ஏற்படவில்லை. அவ்வளவு அழகும் யௌவனமும் வாய்ந்த அச்சகோதரிகள் அழகுக்கேற்ற நற்குணமுடையவர்களாக இல்லாமல் இவ்வளவு அயோக்கியர்களாக இருப்பது கண்டு ஆச்சரியமும் கோபமும் அடைந்தான். கொடிய புலிகளாகிய அவர்கள் சாதுவான பசுவின்தோலைப் போர்த்துக்கொண்டிருப்பதைக் கண்டு ஆத்திரமடைந்தான். பலராமன் இவ்வளவு ஆத்திரமும் கோபமும் அடைந்தவனுயிருந்தும் அதை

வெளிக்குக் காண்பித்துக்கொள்ளாமல் அவர்கள் அளித்த வந்தனத்துக்குப் பதில் வந்தனமும் செலுத்தினன்.

அவன் தங்களைக் கண்டதும் கோபித்துக்கொண்டு திட்டுவான் என்று அச்சகோதரிகள் மூவரும் நினைத்திருந்தார்கள். ஆனால் அவன் அவ்வாறு செய்யாமல் சந்தோஷமாக வரவேற்றதால் அவர்களுக்குச் சிறிது ஆறுதலும் தைரியமும் உண்டாயிற்று. அம்புஜமோ பலராமனைக் கடைக்கண்ணால் உற்றுப் பார்த்து எப்படியாவது அவனை மயக்கித் தன் வசப்படுத்திக்கொண்டால் தாங்கள் மூவரும் க்ஷேமப்படலாம் என்று தன்னுள் கருதினாள். இத்தகைய தைரியம் அவள் மனதில் உதிக்கவே அது முகத்தில் பிரகாசிக்கவும் அவள் முகத்தில் சிறிது பிரகாசம் காணப்படலாயிற்று. அவள் தன்னைக் கடைக்கண்ணால் பார்த்ததையும், பிறகு தைரியமடையவே அவள் முகத்தில் ஒளி பிரகாசிப்பதையும் குறிப்பால் பலராமனும் அறிந்துகொண்டான். முன்னரே ஜகதீசனும் அப்பெண்களின் தந்திரத்தைப்பற்றியும், அவர்கள் எவ்வாறு எந்த ஆடவனையும் மயக்க முயற்சிப்பார்களென்பதையும் பலராமனிடம் சொல்லியிருப்பதால் இப்போது அம்புஜம் ஆரம்பித்த வேலைத்திறத்தையும் அறிந்துகொண்டான்.

இதையெல்லாம் அவன் வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் அப்பெண்களைப் பார்த்து, "மாதர்களே! மகா விசனகரமான ஒரு விஷயத்தைப்பற்றி நான் உங்களிடம் சொற்ப நேரம் பேசவேண்டியதாக இருக்கிறது. நான் இராஜம்மாள் மூலம் சங்கதிகளைச் சொல்லியனுப்பி விடலாமென நினைத்தேன். ஆனால் அவள் சரியாக உங்களிடம் சொல்வாளோ மாட்டாளோ என்னும் சந்தேகம் ஏற்பட்டதாலும், சொன்னாலும் அதன்படி நடக்கவொட்டாமல் உங்களைத் தூண்டிவிடுவாளோ என்றும் சந்தேகப்பட்டதால் அவளிடம்

சொல்லி அனுப்பவில்லை. ஆகவே உங்களை நேரில்காண விரும்பினேன். நாம் இங்கே நின்றால் யாரேனும் பார்த்துச் சந்தேகப்படுவார்களாதலால் சிறிது மறைவாக நின்று பேசுவது நலம்'' என்று கூறினான்.

பிறகு அவர்கள் நால்வரும் ஒரு ஒற்றைப் பாதையின் மூலம் மறைவாக ஓரிடத்துக்குச் சென்றார்கள். செல்லும் போது இரங்கம்மாளும் ஜானகியும் பலராமனுடைய வலது பக்கத்திலும், அம்புஜம் இடது பக்கத்திலுமாகச் சென்றார்கள். பலராமன் அவர்களுடைய கையைப்பிடித்துக்கொண்டு நடக்கவில்லை என்பதை நாம் கூறவேண்டுவதில்லை. அவன் தங்களிடம் பேசியதிலிருந்து விசனமும் துக்கமும் கொண்டிருக்கிறானே தவிர கோபமும் ஆத்திரமும் அடையவில்லை என்பதை அறிந்துகொண்டார்கள். ஆகவே சிறிது சந்தோஷ மடைந்தனர்.

பலராமன் மீண்டும் அப்பெண்களைப் பார்த்து, "நான் ஜகதீசனைச் சந்தித்தேன் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். அவனிடமிருந்து நான் பல துக்க சமாசாரத்தைக் கேள்விப்பட்டேன் என்பதையும் இராஜம்மாள் உங்களிடம் சொல்லி யிருக்கலாம். இன்னும் சிறிது நல்லகுணம் உங்களிடம் இருக்குமானால் உங்கள் வயதுக்குத் தக்கபடி நீங்கள் நடந்து கொள்ளவேண்டும். இவ்வளவு கொடுமையாக நடந்து கொள்வது உங்களுக்குத் தகாது. இப்போதும் நீங்கள் மனந்திரும்பினால் அனைவரும் சௌக்கியமடையலாம்'' என்று கூறினான்.

அதற்கு அம்புஜம், "இல்லை, இல்லை. நாங்கள் அவ்வளவு கொடியவர்களல்ல'' என்று கூறிக்கொண்டே திடீரென்று பலராமனுடைய கையைப் பிடித்துக்கொண்டாள். அப்போது அவன், "நீ சொன்னது உண்மையாகவே

இருக்கவேண்டுமென்று நான் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். நீங்கள் மூவரும் ஆபத்தினின்றும் விடுதலை யடைய வேண்டுமாயின் நீங்கள் இழைத்துவிட்ட பெரிய தீமைக்காக மனமார வருந்தவேண்டும். ஐயோ! என்னகொடுமை! இவ்வளவு கொடிய காரியத்தை நீங்களாகச் செய்திருக்கமுடியாது. யாரோ உங்களைத் தூண்டியிருக்கிறார்கள் என்பது நிச்சயம். உங்களுடைய விஷயத்தைப்பற்றி யெல்லாம் ஜகதீசன் உங்கள் சகோதரியாகிய மீனம்பாள் மூலம் கேள்விப்பட்டதை அப்படியே என்னிடம் சொன்னான். ஆகவே இவ்வளவு பெரிய குற்றத்துக்கு நீங்களே காரணமாக இல்லாமல் கருவியாகமட்டு மிருப்பதாலும், நீங்கள் அழகுடையவர்களாயும் வாலிபமுடையவர்களாயும் இருப்பதாலும் உங்களை மன்னித்துவிட வேண்டுமென்பதே ஜகதீசன் நோக்கம். அதற்கு அவனுடைய பச்சாத்தாபமே காரணமாகும். ஆகவே நீங்கள் உங்கள் குற்றத்துக்காக மனமார வருந்தி மன்னிப்புத் தேடிக்கொள்ளவேண்டியது உங்கள் கடமையாகும்'' என்று கூறினான்.

அப்போது அம்புஜம் ஆவலுடனும் ஆர்வத்துடனும், ''எவ்விதமான மன்னிப்பைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று நீர் சொன்னபோதிலும் அவ்வாறே செய்யத் தயாராயிருக்கிறோம். ஆதலால் அதை விளக்கிக்கூறுங்கள்'' என்று பணிவுடன் கேட்டுக்கொண்டாள். அப்போது இரங்கம்மாளும், ''ஆம்; நாங்கள் மிக்க வந்தனத்துடன் தங்கள் இஷ்டப்படியே நடந்துகொள்வது நிச்சயம்'' என்றாள். ஜானகியும், ''இனி எத்தகைய சூழ்ச்சியிலும் ஈடுபடமாட்டோம் என்று உறுதி கூறுகிறோம்'' என்றாள்.

இவ்வாறு மூன்று சகோதரிகளும் ஒருவர்பின் ஒருவர் ஆர்வத்துடன் சொன்ன பதிலைக் கேட்ட பலராமன்

அம்மூவரையும் பார்த்து, "இப்போது நீங்கள் சொன்ன வார்த்தைகள் உங்கள் இருதயத்தின் அடிப்பாகத்திலிருந்தே தோன்றியது என்று நம்புகிறேன். நீங்கள் என்னிடம் ஒன்றும் மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டியதில்லை. மிக்க கருணையும், தாராள நோக்கமும், உயரிய குணாதிசயங்களும் வாய்ந்த ஜகதீசனிடம் நீங்கள் முறையிட்டுக்கொண்டு மன்றாடவேண்டும். நீங்கள் ஜகதீசனைச் சந்திக்கவேண்டுமென இராஜம்மாளும் உங்களிடம் கூறி இருப்பாள். ஆதலின் நீங்கள் இன்று இரவு டாக்டர் மணவாளன் வீட்டில் ஜகதீசனைச் சந்திக்கத் தயாராயிருக்கிறீர்களா?" என்று கேட்டான். அப்போது இரங்கம்மாள், தான் இறந்தகுழந்தையை இரகசியமாகப் பிரசவித்ததும், அப்பிரேதம் இப்போது மணவாளன் வீட்டில் இருப்பதையும் ஞாபகப்படுத்திக்கொண்டு அச்சத்தாலும் வெட்கத்தாலும், "மணவாளன் வீட்டிலா" என்று திடுக்கிட்டுக் கேட்டாள்.

அதற்குப் பலராமன், "ஆம்; மணவாளன் வீட்டில் தான். அவன் வீட்டில் ராத்திரி நடுநிசியில் நீங்கள் மூவரும் தவறாமல் வந்திருக்கவேண்டும். யாராவது ஒருவர் நின்றுவிட்டாலும் சரிப்படாது. தெரியுமா? இதற்கு உங்களுக்குச் சம்மதந்தானா," என்றான். அப்போது அம்புஜம், "தடையில்லாமல் நாங்கள் மூவரும் அங்கிருப்போமென்பது நிச்சயம். தாங்கள் என்னசொன்னாலும் அப்படியெல்லாம் செய்யத் தயாராக இருக்கிறோம். என் சம்பந்தப்பட்டவரையில் நான் தவறாமல் அங்கே இருப்பேனென்று உறுதி கூறுகிறேன்," என்று கூறினாள். உடனே ஜானகியும்," நீங்களும் ஜகதீசனுமாகச் சேர்ந்து எங்களை மன்னித்துவிடுவதாக இருந்தால் நான் தவறமாட்டேன்" என்றாள். அப்போது இரங்கம்மாள், "அவர்களிருவரும் வரும்போது நான்

மட்டும் எவ்வாறு வாாமலிருப்பேன்'' என்று மெல்லியகுர லில் சொன்னுள்.

அச்சமயம் பலராமன், "இப்போது நீங்கள் மூவரும் அளித்த வாக்குறுதியினின்றும் சிறிதும் பிறழமாட்டீர்க ளென்று நம்புகிறேன். ஜாக்கிரதையாக நடந்துகொள்ளுங் கள். பரிதிபுரத்தை விட்டு வெளியேறிவிட முயற்சி செய்யா தீர்கள். எப்படி யிருந்தாலும் உங்களைப் பிடித்து தண்டிக்க ஏற்பாடு செய்யப்படும். ஆகவே மரியாதையாக இரவு தவ ருமல் ஜகதீசன் இருக்குமிடம் செல்லுங்கள்'' என்று அழுத் தம் திருத்தமாகக் கூறினன்.

அப்போது அம்புஜம் அவன் கையைப் பிடித்துக் கொண்டு அவன் முகத்தை நோக்கியவண்ணம், "ஐயா, எங்க ளிடம் அவநம்பிக்கை கொள்ளவேண்டாம். நாங்கள் தாங் கள் கூறிய ஒவ்வொரு வார்த்தையின்படியும் நடப்போமென் பது திண்ணம். நாங்கள் செய்துவிட்ட குற்றத்துக்காக எத்தகைய பாவமன்னிப்பைக் கோரும்படி சொன்னுலும் அவ்வாறே செய்யத் தயாராக இருக்கிறேம்,'' என்று கூறி னுள். அப்போது இரங்கம்மாள், "ஆம்; அம்புஜம்! எங்க ளுக்காகப் பலராமனிடம் மன்றுடிக் கேட்டுக்கொண்டிரு. நான் அச்சத்தால் நடுங்குகிறபடியால் என்னுல் ஒன்றும் பேச முடியவில்லை. ஜானகி! அம்புஜம் நம் சார்பாகப் பேசிக்கொண் டிருக்கட்டும். வா'' என்று கூறிக்கொண்டே ஜானகியையும் இழுத்துக்கொண்டு பின்பக்கம் திரும்பியும்பாராமல் துறை முகத்தின் பக்கம் சென்றுள்.

இவ்வாறு திடீரென்று இரங்கம்மாளும் ஜானகியும் போய்விட்டதால் தானும் அம்புஜமும் மட்டும் தனியாக நிற்கவேண்டிய நிலைமை ஏற்பட்டதை யொட்டிப் பலராமன் ஆச்சரிய மடைந்தானென்றுலும் இனி என்ன நடக்கப்

போகிறதென்பதைக் கவனிக்க வேண்டுமென்னும் எண்ணத்துடன் மௌனமாக இருந்தான். சிறிதுநேரம் கழித்து, அவன் அம்புஜத்தைப் பார்த்து, "இப்போது நீ என்னிடம் என்ன சொல்லப்போகிருய்" என்று கேட்டான்.

அப்போது அம்புஜம் தன் இருகைகளையும் கோத்துக் கொண்டு பலராமனைக் காமப்பார்வையுடன் நோக்கியவண்ணம், "ஓ, உனக்கு நான் என்ன சொல்லமுடியும்? நீ தயவு செய்து என்னையும் என் சகோதரிகளையும் மன்னிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆ! எனக்கு மயக்கமாயிருக்கிறதே! உன் கரத்தின்மீது சாய்ந்துகொள்ள எனக்கு அனுமதி தரவேண்டும். அதோ காணப்படும் அம்மரத்தினருகில் செல்லும் வரையேனும் உன்மீது சாய்ந்து வருவேன். ஆ! பலராமரே! நீ என்னை வெறுத்துத் தள்ளிவிடவில்லை என்று நம்புகிறேன்" என்று கூறிக்கொண்டு அவன்மீது சாய்ந்தாள். அவனும் அவளைப் பிடித்துக்கொண்டே அவள் குறிப்பிட்ட மரத்தடியில் சென்ருன். அது தனியான ஓரிடமாக இருந்ததுடன் சிறிது இருட்டாகவும் இருந்தது. அச்சமயம் அம்புஜம் அங்கே படுத்துக்கொண்டு, "பலராமரே! இதோ என் பக்கத்தில் சிறிது உட்கார்ந்து ஆறுதல்கூறும். இவ்வளவாவது என்மீது கிருபை காட்டலாகாதா. இங்கே ஓய்வு எடுத்துக்கொள்ளும் சொற்ப நேரத்தில் உங்களிடம் நான் சில முக்கிய விஷயங்களைக் கூற விரும்புகிறேன்" என்ருள்.

பலராமன் அவளுடைய கோரிக்கையை நிறைவேற்றுவதில் சிறிதும் தாமதம் செய்யவில்லை. இவ்வாறு அவன் செய்ததால் அவளுக்கு இன்னும் சிறிது தைரியமும் நம்பிக்கையும் உண்டாய்விட்டது. தான் ஆரம்பித்த காரியத்தில் வெற்றி ஏற்படத் தொடங்கி விட்டதாகவே கருதினுள். அப்போது, அவள், "இந்த ஏரியிலிருந்து இவ்வளவு குளிர்ச்சியான

காற்று வராவிட்டால் நான் மூர்ச்சை யடையவேண்டியது தான்'' என்று கூறிக்கொண்டே அவளுக்கும் தெரியாமல் செய்பவள்போல் தன் மேலாடையை அப்புறப்படுத்தி உள்ளிருந்த அரைக் கைச்சட்டையின் பொத்தானையும் எடுத்து அவளுடைய மார்பு நன்றாகத் தெரியும்படி செய்தாள்.

இதையெல்லாம் கவனியாதவன்போல் பலராமன், 'ஆம்; இது அழகான மாலைதான். இவ்வளவு இனிய இயற்கையைப் பார்த்த பின்னர் மனிதர் மனம்மட்டும் குளிர்ந்த கிருபையை அடையாததன் காரணம் யாதோ?' என்று கேட்டான். அப்போது அம்புஜம், 'நீர் இவ்வாறு பேசுவதைக்காண எனக்கு எவ்வளவோ ஆனந்தமாக இருக்கிறது. இப்போது நீர் என்னிடம் கோபத்துடன் இல்லையென்றே நினைக்கிறேன். எத்தகைய ஆத்திரமும் இப்போது இல்லையென்றே தோன்றுகிறது. இதனால் என்னைத் தாங்கள் அலட்சியம் செய்துவிட வில்லையென்றே தெரிகிறது. ஆதலின் தயவுசெய்து என்னிடம் இப்போது சிறிது அன்புடன் நடந்துகொண்டால் எனக்கு எவ்வளவோ ஆறுதலாக இருக்கும்' என்றாள்.

பலராமன் ஏதேனும் பதில் கூறுவானென அம்புஜம் நினைத்தாள். ஆனால் பலராமன் எத்தகைய பதிலும் கூறாமல் தன் கையின்மீது தலையை வைத்துக்கொண்டு ஆழ்ந்து சிந்திக்கலானான். அப்போது அம்புஜம் தன் காரியம் ஜயிக்குமென்னும் நம்பிக்கையுடன், 'ஓ! எனக்கு உண்மை விளங்கி விட்டது. இப்போது நான் ஒரு உண்மையை ஒப்புக்கொள்ள விரும்புகிறேன். அதாவது நான் மனமார உம்மை நேசிக்கிறேன் என்பதே. நான் உம்மை முதன்முதலாகப் பார்த்த போது உங்களுடைய ரூபலாவண்யத்தையும், இனிய குணத்தையும் கண்டு மோகங்கொண்டேன். அது முதல்

நான் என் அன்பை மறைத்து வைக்காமல் சமயம் வாய்த்த போதெல்லாம் அதை வெளிப்படுத்தினேன். இளவரசியுடன் உலாவும்போதும், ஆகார மருந்தும்போதும் நான் உமது பக்கத்தில் இருந்ததற்குக் காரணம் நானுக வேண்டுமென்று அவ்வாறு அமைத்துக்கொண்டதேயாகும். ஒரு மாது தனக்கு ஒரு ஆடவனிடத்திலுள்ள அன்பை எந்த வழியாலெல்லாம் காட்டிக்கொள்ள முடியுமோ அவ்வளவு வகையிலும் காட்டிக்கொண்டேன்,' என்று கூறினுள்.

இதைக்கேட்ட பலராமன், அவள் வார்த்தையையும், அழகையும், அப்போது அவர்கள் இருந்த நிலைமையையும் கண்டு அவளிடம் ஒருவாறு மோகங்கொண்டவனுய், 'நானும் உன்னை நேசிக்கிறேன் என்று உறுதி கூறுகிறேன். நீ காட்டிய வகைகளையெல்லாம் நான் உணர்ந்து கொள்ளாமலில்லை. ஆனுல் என்பெயர் கெட்டுப்போகுமே என்னும் அச்சத்துடன் நான் உன் செய்கைகளுக்கெல்லாம் பதில் அளிக்காமல் இருந்தேன். ஆனுல் நீ உண்மையிலேயே என்னை நேசிக்கிறுய் என்பதை ருஜுப்படுத்தவேண்டும். வெறும் மோகத்துக்காக ஒரு காரியத்தில் இறங்கமுடியாது. உண்மையான காதல் இருக்கிறதா என்பதை உறுதியுடன் கூறு' என்றுன்.

அப்போது அம்புஜம் அளவுகடந்த மோகமுடையவளாய் தன் உணர்ச்சியை அடக்க முடியாதவளாய் உடனே பலராமனுடைய கரத்தைப் பிடித்துக்கொண்டு, 'ஐயோ! கடவுளே! நான் நிச்சயமாகக் கூறுகிறேன். நீரும் இவ்வாறு பேசியதுபற்றி எனக்கு மிகச் சந்தோஷம்' என்று கூறிக்கொண்டே பலராமனுடைய கையை முதலில் தன் உதட்டிலும், பிறகு தன் மார்பிலும் வைத்து அழுத்தினுள். அச்சமயம் பலராமன் தன் கையை இழுத்துக்கொண்டு ஆனுல்

காதலுடன் நிரம்பிய பார்வையுடன் அம்புஜத்தின் முகத்தை நோக்கியவண்ணம், 'உண்மையுடன் நேசிப்பதாக ருஜுப்படுத்துவதற்கு முன் அன்புச்செயலில் ஈடுபடுவது தவருகும்' என்று கூறினன். அப்போது அம்புஜத்துக்குக் காமவிகாரம் அதிகமாய் விட்டதால் காமப்பித்தம் பிடித்தவள்போல், 'தாங்கள் கூறுவதென்ன? தாங்கள் கூறுவதென்ன?' என்று ஆத்திரத்துடன் கேட்டாள்.

அச்சமயம் அம்புஜத்துக்குத் தோன்றிய காமவிகாரம் பலராமனிடமும் பிரதிபலித்தபடியால் அவன் அடக்கமுடியாத காம உணர்ச்சியுடன், 'உனக்கு என்னிடம் உண்மையான அன்பும் நேசமும் இருக்கிறதென்பதை ருஜுப்படுத்த வேண்டுமென்று கேட்டேனல்லவா?' என்று கூறினன். அம்புஜம் தன் தந்திரமும் அழகும் வேலைசெய்து வருகிறதென்பதை உணர்ந்து, 'உமக்கு எப்படிப்பட்ட ருஜு வேண்டும்' என்று ஆவலுடன் பரிந்து கேட்டாள். அதற்குப் பலராமன், 'என்ன ருஜுவென்ரு கேட்கிருய். நீ என் அன்பைத் திருப்பிப் பெறுவதற்குத் தகுதியுள்ளவள் என்பதை ருஜுப்படுத்து. நீ இழைத்துள்ள தீமைகளினின்றும் விலகிவிடுவதாகப் பிரமாணம் செய். இழைத்த கொடுமைகளுக்காக மனம் வருந்தி மன்னிப்புக் கேட்டுக்கொள். எதிர்காலத்திலேனும் யோக்கியமாக நடந்துகொள்வதாக உறுதி கூறு. இவ்வாறெல்லாம் செய்து நீ என் அன்புக்குப் பாத்திரமானவள் என்பதைத் தெரியப்படுத்து' என்று கூறினன்.

அம்புஜம் உண்மையிலேயே பலராமனைத் தன் வழிக்குக் கொண்டுவர வேண்டுமென்னும் எண்ணமுடையவளாகவும், தனியே அங்கு தான் காதலிக்கும் ஒரு ஆடவனுடன் இருந்ததால் அவளுக்குக் காமப்பித்து தலைக்கேறி விட்டதாலும் அவள் யாதொரு மறுமொழியும் சொல்லாமல் சுருக்க

மாக, 'நீர் என்ன செய்யச்சொன்னாலும் அப்படியே செய்யத் தயாராக இருக்கிறேன். அதுவும் உண்மையுடன் கூறுவேன்' என்று கூறிக்கொண்டே அவனது கரத்தைப் பிடிக்க முயன்றாள். ஆனால் அவன் அதற்கு இடந்தாமல், 'நீ முடிவான உன் உண்மைத்தன்மையை ருஜுப்படுத்தாத முன் என் கரத்தை உன்னிடம் தரமாட்டேன். உன் சமீபத்திலும் அணுகுவது சந்தேகமே' என்று கூறினான்.

அப்போது அம்புஜம், 'ஆ! என்னிடம் உமக்கிஷ்டமான எந்தக் கேள்வியை வேண்டுமாயினும் கேளுங்கள். அதற்கு நான் கூறும் பதிலிலிருந்து நான் உண்மையுடன் நடந்து கொள்கிறேனா இல்லையா என்பதை அறிந்துகொண்டு விடலாம்,' என்று கூறினான்.

அதைக் கேட்டுச் சந்தோஷமடைந்த பலராமன் இதுவே தக்க சமயமெனக் கருதி, 'அப்படியானால் நான் கேட்கும் விஷயத்தின் உண்மையைக் கூறு பார்ப்போம். எனதன்புள்ள அம்புஜம்! உங்கள் மூவரில் நான் சிற்சில சமயங்களில் அணிவதுபோன்ற ஆடையை இராக்காலங்களில் அணிந்துகொண்டு ஆடவனைப்போல் வேடம் தரித்து நமது மாளிகையில் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்குச் சென்றது யார் என்னும் உண்மையைக் கூறு' என்றான்.

அப்போது அம்புஜம் தான் இன்னும் சொற்பநேரத்துக்குள் தன்னிஷ்டப்படி தான் காதலிக்கும் பலராமனைத் தழுவிக் கட்டி அணையக்கூடிய பாக்கியம் கிடைக்கப்போகிறதென்னும் எண்ணத்துடன் ஆவல் மிகுந்தவளாய், 'நான் இப்போது அச்சங்கதியைப்பற்றிய உண்மையையெல்லாம் கூறிவிட்டால் அடுத்த நிமிஷமே உன்னைக்கட்டித்தழுவ அனுமதி யளிப்பீரோ?' என்று வினவினான். அச்சமயம் அவனும்,'

'ஆம்; ஆம்; நீ சந்தேகமின்றி அவ்வாறே செய்யலாம்' என்று கூறினன்.

அதற்கு அவள், 'ஆம்; நான்தான் உம்மிடம் எனக்குள்ள அளவிலாக் காதல் காரணமாக உம்மைப்போன்ற வேடம் சில சமயங்களில் அணிவதுண்டு. உம்முடைய ஆடைகளையெல்லாம் நான் சம்பாதித்து வைத்திருக்கிறேன். உம்முடைய அழகானமீசைபோலவும் ஒருமீசையைத் தயார் செய்து வைத்திருக்கிறேன். நீங்களும் ஒருமுறை நான் அவ்வாறு வேடமணிவதைக் காணவேண்டுமென்பதுதான் என் ஆவல். உங்களைப்போல் வேடமணிந்து கண்ணாடியில் பார்த்துப் பார்த்து நான் அகமகிழ்வதுண்டு,' என்றாள். அதைக் கேட்ட பலராமன் அவள் மோகத்தில் சிக்குண்டு, "ஆ, அம்புஜம்! உன் வார்த்தைகள் என்னை மயங்கச் செய்கின்றன. என்னென்னவோ வழிதவறிய எண்ணங்களெல்லாம் என் மனதில் உதிக்கின்றன. இதோ வா என்னுடைய கரங்களில்! என்னைக் கட்டித்தழுவு" என்று மதிமயங்கிக்கூறிக்கொண்டே அவளருகில் சென்றான். அவளும் உடனே அவன்மீது தன் இருகரங்களையும் போட்டு மார்போடு அணைத்துக்கொண்டு தழுவி வாயோடு வாய்வைத்து முத்தமிட்டாள். இவ்வாறு தழுவிய வண்ணமே சொற்பநேரமிருந்தார்கள். பிறகு திடீரென்று பலராமன் அம்மயக்கத்தினின்றும் விடுபட்டு, "விலகு, விலகு; யாரேனும் பார்த்துவிடப் போகிறார்கள். ஓ! அப்படி யாரேனும் பார்த்துவிட்டால் நம்முடைய கதி யாதாகும்? மற்றவர்கள் நம்மைப்பற்றி என்ன சொல்வார்கள்" என்று சொல்லிக்கொண்டே அவளுடைய தழுவலினின்றும் விடுவித்துக்கொண்டு எழுந்தான்.

அப்போது அம்புஜம், "ஓ! நீர் என்னுடைய சொத்து; இப்போதுதான் எனக்குச் சந்தோஷமாயிற்று. மீண்டும் நாம் எப்போது சந்திக்கலாம். பலருடைய முன்னிலையில்

நாம் விரைவில் சந்திப்போமென்பது நிச்சயமே. ஆனால் நான் கேட்பதெல்லாம் நாம் இருவரும் எப்போது தனியாகச் சந்திக்கலாம் என்பதே'' என்று ஆவலுடன் வினவினள். அச்சமயம் பலராமனும் அவள் கையைப் பிடித்துக்கொண்டு அன்புடனும் இனிய குரலுடனும், "அம்புஜம்; நான் சொல்வதைக் கவனி. நான் உன்னைக்காண விரும்புகிறேன். ஆனால் நீ என்னைப்போல் ஆடை அணிந்திருக்கும் போதுதான் பார்க்கவேண்டுமென்னும் ஆவல் அதிகமாயிருக்கிறது. ஆதலின் இன்றிரவு நடு நிசிக்குப் பிறகு நீ என்னைப்போல் வேடமணிந்துகொண்டு என் அறைக்கு வருகிறாயா?'' என்று கேட்டான்.

அம்புஜமும் அளவுக்கு மீறிய சந்தோஷத்துடன், "இன்றிரவா! சரி; வருவதில் தடையில்லை. ஆனால் இன்றிரவே டாக்டர் மணவாளன் வீட்டுக்குப்போய் ஜகதீசனைச் சந்திக்கவேண்டியதாக இருக்கிறதே!'' என்றாள். அதற்குப் பலராமன், "ஆம்; தவறாமல் போகவேண்டும். நான் அவனிடம் செய்த வாக்குறுதியினின்றும் சிறிதும் தவறமாட்டேன். இன்று நீமட்டும் போகவில்லையென்றால் என்னுடன் ஏதோ புதிய சம்பந்தம் இருப்பதாகத் தெரிந்துவிடும். என் பலஹீனத்தை வெளியாக்க எனக்கு இஷ்டமில்லை. நீயும் இப்போது நம்மிருவரிடையே நடந்த காதல் விஷயத்தை யாரிடமும் சொல்லலாகாது. யாரிடமாவது சொன்னதாகத் தெரிந்தால் உடனே உன்னை மறந்து பிறகு கனவிலும் உன்னைப்பற்றிக் கருதமாட்டேன். இப்போது நீ தூண்டி எழுப்பிய என் அன்பெல்லாம் விரோதமாக மாறிவிடும். நான் சொல்வது உனக்குத் தெரிகிறதா? நீ யாரிடமும் சொல்வதில்லையென்று தெய்வசாட்சியாகப் பிரமாணம் செய்'' என்று கூறினன்.

தான் எப்படியாவது பலராமனிடமிருந்து இன்பத்தைப் பெறவேண்டுமென்று காத்திருந்த அம்புஜம், தன் எண்ணம்

இன்னும் சொற்ப நேரத்துக்குள் பலித்து விடுவதாக இருக்கும் வேளையில் தன் அறியாமை காரணமாக எத்தகைய அசந்தர்ப்பமும் நேரிட்டு விடலாகாதென்னும் எண்ணத்துடன், "நான் இப்போது நம்மிடையில் நடந்த விஷயத்தைப்பற்றி ஒருவரிடமும் கூறமாட்டேன் எனப் பிரமாணம் செய்கிறேன். நான் ஒரு வார்த்தைகூட இதைப்பற்றி ஒருவரிடமும் பேச மாட்டேனென்பது திண்ணம். இன்று இரவு என் சகோதரிகளுடன் மணவாளன் வீட்டுக்குச் செல்வது நிச்சயம். அங்கிருந்து திரும்பிய பிறகு" என்று சொல்லிக்கொண்டே மிகக் கெட்ட பார்வையுடன் பலராமனை நோக்கினாள்.

அப்போது பலராமனும் அவளுடைய எண்ணத்தை அறிந்துகொண்டு, "ஆம், நீ மணவாளன் வீட்டிலிருந்து திரும்பிய பிறகு எந்நேரமானாலும் பாதகமில்லை. நீ என்னைப் போல் வேடமணிந்துகொண்டு மிக்க இரகசியமாக யாருக்கும் தெரியாமல் என் அறைக்கு வந்துவிடு" என்று கூறினான். அப்போது அம்புஜம் அச்சமயத்திலேயே பலராமனைக் கட்டி அணைத்துக்கொண்டு சகலவிதமான இன்பங்களையும் அனுபவித்தவளேபோல் உணர்ச்சி யடைந்து மிக்க சந்தோஷத்துடன், "ஆம்; ஆம்; நான் எந்நேரமானாலும் தவறாமல் நான் சொன்னபடி உன் அறைக்கு வரத் தவறமாட்டேன்" என்று கூறினாள். பிறகு பலராமன் அவளுடைய கையைப்பிடித்து அன்புடன் அழுத்திவிட்டு, "இப்போது நீ உன் சகோதரிகளுடன் கலந்துகொள். ஆனால் ஒரு வார்த்தையேனும் வெளிவிடப்போகிறாய். ஜாக்கிரதை. ஏதேனும் சங்கதி வெளியாய்விட்டால் உன்பாடு திண்டாட்டமே" என்று கூறினான்.

இவ்வாறு சொல்லிவிட்டு பலராமன் ஏரிக்கரையின்மீது செல்லாமல் வேறு வழியாக இளவரசியின் மாளிகைக்குச்

சென்றான். அம்புஜம் தான் பெற்ற காமவிகார உணர்ச்சியை ஒருவாறு அடக்கிக்கொண்டு தன் ஆடைகளையெல்லாம் சரிப் படுத்திக்கொண்டு தன் மற்ற இருசகோதரிகளும் இருக்கும் இடத்தை நோக்கிப் புறப்பட்டாள். அப்போது அவள் தன் காதலன் பலராமன் கூறியபடியே தங்களிருவருக்கு மிடையில் நடந்த காதல் விஷயங்களைப்பற்றித் தன் சகோதரிகளிடமும் கூறுவதில்லையென்று தீர்மானித்துக்கொண்டாள். ஆயினும் அவர்கள் வேண்டுமென்றே அம்புஜத்தைத் தனியே விட்டுச் சென்றதாலும், இங்கு ஏதேனும் விசேஷ சம்பவங்கள் நடந்திருக்கலாமென அவர்கள் அறிவார்களாதலாலும் மொத்தமாக விஷயங்களை மறைத்துவிட முடியவில்லை. ஆகவே எவ்வளவு உபாயமாகச் சொல்லமுடியுமோ அவ்வளவே சொல்வதெனத் தீர்மானித்தாள். இவ்வாறு தீர்மானித்துக்கொண்டு அவள் ஏரிக்கரைக்கு வந்து அங்கு அவளுக்காகக் காத்திருந்த மற்ற சகோதரிகளுடன் கலந்து கொண்டாள்.

நாம் மேலே கூறியபடி அம்புஜமும் பலராமனும் காதல் விஷயத்தில் மூழ்கியிருந்த காலத்தில் அவளைத் தனியேவிட்டு ஏரிக்கரையின் பக்கமாகச் சென்ற மற்ற இரு சகோதரிகளான இரங்கம்மாள், ஜானகி ஆகிய இருவருக்கும் என்ன நிகழ்ந்த தென்பதைக் கவனிப்போம். அச்சகோதரிகளிருவரும் அவ்வாறு ஏரிக்கரைக்குச் செல்லும்போது ஜானகி தன் சகோதரி இரங்கம்மாளைப் பார்த்து, "நமது அம்புஜம் எப்படியாவது பலராமனை வசப்படுத்திக்கொண்டு விடுவாள் என்று நினைக்கிறாயா? ஓ! அவன் அவளுடைய சாகஸங்களுக்கும் சாமர்த்திய தந்திரங்களுக்கும் உட்பட்டு விடுவானயின்" என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தாள். அப்போது இரங்கம்மாள், "ஆம்; அவ்வாறு பலராமன் அம்புஜத்தின்

வசப்படுவது நமக்கு எவ்வளவோ உதவியாக இருக்கும். நமக்கு ஆபத்துவரும் என்று கேள்விப்பட்டதுமே என் புத்தியே கலங்கிவிட்டது. ஆகையால் ஒன்றும் யோசிக்கமுடியவில்லை. இப்போது நிதானமாக யோசித்துப்பார்த்ததில் எனக்குப் பல சந்தேகங்களும் அச்சங்களும் தோன்றியிருக்கின்றன'' என்று கூறினுள்.

அதற்கு ஜானகி, "ஆம்; அவ்வாறு புத்தி கலங்கிப் போவது இயற்கைதானே. இறந்துபோன குழந்தையின் பிரேதம் கிடக்கும் டாக்டர் மணவாளன் வீட்டுக்கே—அப்பிரேதத்தைக் கண்டுபிடித்த ஜகதீசனையே சந்திக்கவேண்டுமென்று தெரிந்ததும் புத்தி கலங்குவதில் ஆச்சரியமொன்றுமில்லை'' என்றாள். குழந்தையின் பிரேதம் என்னும் சொல் அவள் காதில் பட்டதுமே அவளுடைய தேகம் முழுதும் அச்சத்தாலும், கூச்சத்தாலும், வெட்கத்தாலும் நடுங்கியது. ஆகவே அவள், "அதைப்பற்றிப் பேசவேண்டாம்'' என்று அலறினுள். பிறகு சொற்பநேரம் இருவரும் மௌனமாக இருந்தார்கள். இதற்குள் அவர்களிருவரும் ஏரிக்கரையிலுள்ள துறைமுகக் கட்டடத்துக்கு வந்துசேர்ந்தனர். அவர்கள் அங்கே வந்தபோது அங்கு ஒரு கனவான் தனியாக உட்கார்ந்துகொண்டிருப்பதைக் கண்டார்கள். பிறகு சொற்பநேரத்துக்கெல்லாம் மற்றொருகனவான் அங்கேவரவும் அவர்களிருவரும் ஒருவரையொருவர் கண்டு பிரமிப்படைந்ததையும் கண்டார்கள். உடனே அவர்களில் ஒருவன் மற்றவனைப் பார்த்து, "கர்னல் மாரப்பா! ஏது மறுபடியும் இங்கே வந்திருக்கின்றாய்,'' என்று மிக ஆச்சரியத்துடன் கேட்டான். அதே சமயத்தில் குமாரவேல் பிரபுவைக் கண்ட ஜானகி மிக ஆச்சரியத்துடன் நோக்கினுள். அப்போது அவள் ஜானகி என்பதை உணர்ந்த குமாரவேல் பிரபுவும், "ஓ! நீயா! என தன்புள்ள காதலியா?'' என்றான். அப்போது கர்னல் மாரப்

பன், "அப்படியானல் அங்கே இருக்கும் மற்றொருமாது என் அன்புள்ள அம்புஜமாகத்தான் இருக்கவேண்டும்" என்று கூறிக்கொண்டே அம்மாதர்கள் இருக்குமிடம் நோக்கி ஆவ லுடன் ஓடியதில் அங்கே நிற்கும் மாது அம்புஜம் அல்ல என் பதைக்கண்டு ஏமாற்றமடைந்து மன்னிப்புக் கேட்டுக்கொண் டான்.

அப்போது ஜானகி அவ்விரு ஆடவர்களையும் பார்த்து "இவள் என் மூத்தசகோதரி இரங்கம்மாள்," என்று சொல்லிவிட்டுத் தன் தமக்கையைப் பார்த்து, "இரங்கம் மாள்! இவர்தான் நான் முன்பு பலதடவை பிரஸ்தாபித்திருக் கும் குமாரவேல்பிரபு" என்று கூறினாள். அப்போது கர்னல் மாரப்பன் ஒரு அடி முன் எடுத்துவைத்து இரங்கம்மாளை நோக்கி, "என்பெயர் கர்னல் மாரப்பன் என்பதும் உனக்குத் தெரிந்திருக்கும். உன் தங்கை அம்புஜம் என்னைப்பற்றிப் பிரஸ்தாபித்திருப்பாள் அல்லவா?" என்றான். அதற்கு ஜானகி, "ஆம்; அதுபோலவே ஆடவர்களாகிய நீங்களிரு வரும் எங்களிருவரைப்பற்றிப் பேசிக்கொண்டிருப்பீர்கள்," என்றாள்.

பிறகு குமாரவேல்பிரபு ஜானகியைக் கண்டு, "இப் போது நாம் ஒருவரோடொருவர் கோபத்துடன் பேசிக் கொள்ளலாகாது. தயவுசெய்து என்னைமன்னித்துவிடு. நான் இரத்தின புரியிலிருந்து மீண்டும் இவ்வளவுதூரம் உன்னைக் கண்டு களிக்கவே இங்குவந்தேன்" என்றான். உடனே கர் னல் மாரப்பனும், "ஆம்; நானும் உன் சகோதரி அம்புஜத் தைக் காணவே ஆவலுடன் வந்தேன். இப்போது அவள் எங்கே" என்று மிக்க ஆர்வத்துடன் வினவினான். அப் போது குமாரவேல் ஜானகியை நெருங்கி இரக்கமாக "ஏன் என்னுடன் தாராளமாகப் பேசாமல் இப்படி பிகுவாக இருக்

கின்ருய்'' என்று கேட்டுக்கொண்டே ஜானகியைக் காதல் பார்வையுடன் நோக்கினுன். இத்தகைய சம்பாஷணை நடந்து கொண்டிருக்கையில் இரங்கம்மாள் ஜானகி ஆகிய சகோதரிக ளிருவரும் மிகப் பெருந்தன்மையுடனும், சர்வ ஜாக்கிரதை யாகவும் நடந்துகொண்டார்கள். இரங்கம்மாள் அவ்விரு ஆ வர்களையும் அப்போதுதான் முதல்முறை பார்த்தாள். தன் சகோதரிகளாகிய அம்புஜமும் ஜானகியும் அவர்களைக் காத லர்களாகக் கொண்டதில் ஆச்சரிய மொன்றுமில்லையென்று அறிந்தாள். ஏனெனின் அவ்விரு ஆடவர்களும் ரூபலாவண்ய முடையவர்களாகவும், உயரமாகவும், அழகிய பார்வையை யுடையவர்களாகவும் இருந்தார்கள். எனினும் அவளும் அவர்களை ஏதோ ஒரு காரணத்தால் அருவருப்பதுபோல் காண்பித்தாள். ஏனெனின் ஜானகியும் அவ்வாறே நடந்து கொண்டாள்.

அப்போது ஜானகி பின்வருமாறு கூறினுல்:—நான் எனக்காகவும், என் சகோதரி அம்புஜம் சார்பாகவும் ஒரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். அதாவது குமாரவேல் பிரபுவாகிய நீயும், கர்னல் மாரப்பனும் எங்களைத் தூக்கிக் கொண்டு போய்விடுவதாகச் செய்த சூழ்ச்சிகள் உங்களுக்கு மிக்க அவமானத்தைத் தாக்கூடியவை. ஆனுல் தற்செயலாய் அது நிறைவேருமற் போய்விட்டது. எனினும் அச்சூழ்ச் சியே எங்களையும் உங்களையும் நிரந்தரமாகப் பிரித்துவிட்ட தென்பதை நீங்கள் இருவரும் அறிந்துகொள்ளுங்கள்'' என்று கூறிவிட்டுத் தன் சகோதரி இரங்கம்மாளைக் கூட்டிக் கொண்டு அங்கிருந்து புறப்படத் தயாரானுள். ஆனுல் குமார வேல் ஜானகியின் கையைப் பிடித்துக்கொண்டு, அவள் அதை விடுவித்துக்கொள்ள எவ்வளவு முயன்றபோதும் விடா மல், "அன்புள்ள ஜானகி! ஒரே ஒரு வார்த்தை சற்று நில்,

நாம் இம்மாதிரி பிரிந்துவிடலாகாது. நான் என் விஷயத்தைப் பற்றி உன்னிடம் விளக்கிச் சமாதானம்கூற எனக்குச் சந்தர்ப்பம் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்," என்று கூறினன்.

அச்சமயம் கர்னல் மாரப்பனும் இரங்கம்மாளைப் பார்த்து, "உன் சகோதரி அம்புஜத்தின் விஷயங்களெல்லாம் உனக்குத் தெரிந்திருக்குமாதலின் நீ என் சார்பாக என் கோரிக்கையை உன் சகோதரியிடம் அறிவித்து என் விஷயத்தை விளக்கிக்கூற அவகாசமளிக்கும்படி சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்," என்று கூறினன்.

ஜானகி குமாரவேல் பிரபுவின் பிடியினின்றும் விலகிக்கொள்ள எவ்வளவோ முயன்றும் முடியாமையால் ஆத்திரத்துடனும் கோபத்துடனும், "குமாரவேல்! என் கையை விடு. என்னைப் பிடித்து வைத்துக்கொள்வதில் பிரயோஜனமில்லை விட்டுவிடு" என்றாள். ஆனால் அவன் விடாமல், "நம்மிடையே நடந்துபோன காரியங்களைப்பற்றிச் சமாதானம்கூற எனக்குச் சந்தர்ப்ப மளிக்கமாட்டாயோ?" என்று கெஞ்சிக் கேட்டான்.

அதற்கு அவள், "அம்புஜத்தின் சம்மதமில்லாமல் நான் எதுவும் செய்யமாட்டேன். எங்களிருவரிடையில் எத்தகைய இரகசியமும் கிடையாது. நாங்கள் எல்லாவற்றையும் கலந்து பேசி யிருக்கிறோம். ஆகவே நாங்கள் எக்காரியத்தையும் ஒற்றுமையுடன் தான் செய்யவேண்டும்" என்று கூறினாள். அப்போது இரங்கம்மாளும், தன்னிடம் இவ்விஷயமாய் முறையிட்டுக்கொண்ட கர்னல மாரப்பனிடம், "ஆம் எனது சகோதரி ஜானகி சொன்னதைவிட அதிகமாக ஒன்றும் நான் சொல்லக்கூடவில்லை" என்றாள்.

அப்போது குமாரவேல் திடீரென்று ஏதோ எண்ணம் தோன்றியவன்போல், ஜானகியின் கையைப் பிடித்துக் கொண்டிருந்த வண்ணமே, "அப்படியானால் நீ எவ்விதமாகத் தீர்மானிக்கின்றாயோ அம்முடிவைக் கடிதத்தில் எழுதி அனுப்புகிறாயா? அதைப்பற்றித் தனியாகப் பின்னர் ஆலோசிப்பீர்களா? எப்படியாவது நான் இரத்தினபுரிக்குச் செல்வதற்குமுன் உன்னுடன் சமரசம் செய்து கொள்ளும்படியான சந்தர்ப்பத்தை எனக்கு அளிக்க மறக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்," என்று கேட்டான். அதற்கு அவள், சற்று நேரத்துக்குமுன் எவ்வளவு பிகுவாய் இருந்தாள் என்பதையும், அன்று காலையில் ஏதோ சந்தர்ப்பம் வாய்த்தபோது இரங்கம்மாளிடம் அவள், தான் மறுபடியும் குமாரவேல் பிரபுவைக் காண நேர்ந்தால் தான் பகிஷ்காரம் செய்துவிடப் போவதாகக் கூறியதையும் மறந்து, "அப்படியானால் அக்கடிதம் உனக்கு எந்த விலாசத்துக்கு அனுப்புவது" என்று கேட்டாள்.

அதற்குக் குமாரவேல்பிரபு மிக சந்தோஷத்துடன், "இப்போது நான் இவ்வூரிலுள்ள ராயல் ஓட்டலில் என் சொந்தப் பெயருடனேயே தங்கியிருக்கிறேன். நீ எனக்கு அவ்விலாசத்துக்கு ஒரு கடிதம் எழுதியனுப்பி, எப்போது, எங்கே என்னை வரச்சொன்னாலும் உன்னைச் சந்திக்கத் தயாரா யிருக்கிறேன். நீ என் கோரிக்கையை முற்றிலும் மறுத்துவிடமாட்டாய் என்பது எனக்குத் தெரியும்" என்று கூறினான். அப்போது ஜானகி "அப்படியானால் சரி; நான் இதைப்பற்றி யோசித்துக் கடிதம் எழுதுகிறேன். விரைவில் என் கடிதம் உனக்குக் கிடைக்கும்; என் கையைவிடு" என்று கூறிக்கொண்டே தன் கையை இழுத்துக்கொள்ள முயன்றாள். குமாரவேல்பிரபுவும் அக்கையைத் தன் உதட்டில் வைத்து முத்தமிட்ட பின்னர் விட்டுவிட்டான்.

அப்போது இரங்கம்மாள் மிக ஆவலுடன், கர்னல் மாரப்பனைப் பார்த்து, "அம்புஜம் உன்னைக் காணவிரும்பி கடிதம் எழுதவேண்டுமாயின் எந்த விலாசத்துக்கு எழுதுவது?" என்று கேட்டாள். அதற்குக் கர்னல் மாரப்பன், "தற்செயலாக நானும் அதே ராயல் ஒட்டலில் தங்க நேரிட்டிருக்கிறது. நான் இந்த பரிதிபுரத்துக்கு வந்தே ஒருமணி நேரம்தான் ஆகிறது. இதற்குள் இங்கே உங்களைச் சந்திக்கலாமென்னும் ஆவலுடன்தான் வந்தேன்" என்று பதில் அளித்தான். உடனே அவள் அவர்களிருவருக்கும் வந்தனம் செலுத்திவிட்டு தன் சகோதரி ஜானகியின் கையைப் பிடித்துக்கொண்டு அவர்களை விட்டுப் புறப்பட்டு நடக்க ஆரம்பித்தாள். ஜானகி தன் சகோதரியுடன் புறப்பட்டுச் சென்றபோது திடீரென்று பின்பக்கம் திரும்பி குமாரவேல் பிரபுவைக் கடைக்கண்ணால் நோக்கினாள். அது அவனுக்கு நம்பிக்கையையும் தைரியத்தையும் அளித்தது.

அச்சகோதரிகளிருவரும் உடனே ஏரிக்கரையின் கீழ்ப் பக்கமாகச் சென்று தங்கள் சகோதரி அம்புஜத்தைத் தனியே விட்ட இடத்தை நோக்கிச் சென்றார்கள். இதற்குள் அவளும் தன் சகோதரிகளை எதிர்நோக்கி வந்தாள். அம்மூவருமாகச் சேர்ந்து இளவரசியின் மாளிகைக்குச் சென்றார்கள். இரங்கம்மாளும் ஜானகியும் சென்றபின்னர் கர்னல் மாரப்பனும் குமாரவேல்பிரபுவும் தனியாக நின்றார்களாதலால் ஒருவரையொருவர் வெறிக்கப் பார்த்தனர். ஒருவரையொருவர் எவ்வாறு வரவேற்பதென்பதை அறியாமல் திகைத்தனர். அப்போது அவ்விருவருடைய உள்ளத்திலும், அவர்கள் பரிதிபுரத்துக்கு வெகு தூரத்திலுள்ள சிற்றூரில் ஒருவரையொருவர் துப்பாக்கி முனையில் மிரட்டி ஒருவருடைய இரகசியத்தை யொருவர் அறிந்துகொண்டதைப்பற்றிய ஞாபகம் உதித்தது.

கடைசியாக குமாரவேல்பிரபு சிரித்துக்கொண்டே, "அப்படியா! நாம் மறுபடியும் சந்திக்கும்படியான சந்தர்ப்பம் வாய்த்ததுபோலும்! இவ்வாறு எதிர்பாராமலே காரியங்கள் நிகழ்வதைப் பார்த்தால் இதில் ஏதோ விசேஷமிருக்கிறதென்று தோன்றுகிறது" என்று கூறினான். குமாரவேல் பிரபுவுடன் விரோதமாக இருப்பதைவிடச் சிநேகமாக இருந்தே காரியம் சாதித்துக்கொள்வது நலமெனக் கர்னல் மாரப்பனுக்குத் தோன்றியதால், "ஆம்; எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது," என்றான். அப்போது குமாரவேல் பிரபு கர்னல் மாரப்பனைப்பார்த்து, "உன்னை மதனவல்லி மீண்டும் இவ்விடத்துக்கு அனுப்பினாள்போலும்" என்றான். அவனும் குமாரவேலைப் பார்த்து, "உன்னையும் அவள்தானே அனுப்பி யிருக்கவேண்டும்" என்றான்.

அதற்குக் குமாரவேல்பிரபு, "ஆம்; மதனவல்லிதான் அனுப்பினாள் என்பதை ஒப்புக்கொள்கிறேன். மேலும் அதே வேலைக்காகவும் அனுப்பியிருக்கிறாள் என்பதையும் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் இம்முறை மிகக் கடினமான கட்டளையுடன் அனுப்பியிருக்கிறாள்," என்று பதிலளித்தான். அப்போது கர்னல் மாரப்பனும், "என்நிலைமையும் அதுதான். எப்படியாவது இளவரசிக்கு விரோதமாகச் செய்யப்படும் சூழ்ச்சியை ஒழித்துவிட வேண்டுமென்பதே எனக்கிடப்பட்ட கட்டளை. நான் அம்புஜத்தினிடம், அவளுடைய சங்கதிகளெல்லாம் எனக்குத் தெரியுமென்று கூறியும் மிரட்டியும் அவளை அச்சதியாலோசனையிலிருந்து பிரித்துவிட வேண்டுமென்று மதனவல்லி கூறியிருக்கிறாள்" என்று விவரமாகக் கூறினான்.

அதற்குக் குமாரவேல், "நானும் ஜானகியிடம் அவ்வாறு கூறவேண்டுமாம். அதிருக்கட்டும். அதற்காக உனக்கு என்ன சன்மானம் செய்வதாக ஒப்புக்கொண்டிருக்கிறாள்," என்று

கேட்டான். அதற்கு மாரப்பன், "வருஷா வருஷம் ஆயிரம் பவுன்கள் தருவதாகச் சொல்லியிருக்கிருள். மேலும் நான் இப்போது இரத்தினபுரிக்குச் சென்றிருந்தபோது அவள் ஐயாயிரம் பவுன் கொடுத்தாள். நாளையதினம் நான் இவ்வூர் பாங்கியில் போய்க்கேட்டால் மற்றும் மூன்று அல்லது நான்கு ஆயிரம் பவுன் கிடைக்கும். இன்று சிறிது தாமதமாக நான் வந்தபடியால் இன்றே வாங்கமுடியவில்லை. உனக்கு என்ன கிடைத்தது? இனியும் என்ன கிடைக்கும்'' என்று கேட்டான். அதற்குக் குமாரவேல்பிரபு, "எனக்கும் சில ஆயிரம் பவுன்கள் கிடைத்தன. இன்னும் எனக்குத் தகுதியான கௌரவப்பட்டமும், பென்ஷனும் வாங்கித்தருவதாக வாக்களித்திருக்கிருள். அதிருக்கட்டும். இப்போது நாம் நமது கடமைகளைச் செய்வதில் பரஸ்பரம் ஒத்திட்டுப் பார்த்துக் கொண்டு விஷயங்களை அறிந்துகொள்ள வேண்டியதாக இருக்கிறது. நாம் இருவரும் தற்செயலாக ஒரே ஓட்டலில் தங்கியிருப்பதால் அங்கேபோய் இருவரும் ஒன்ருக ஆகாரம் அருந்திவிட்டு இதர விஷயங்களைப்பற்றி நிதானமாகப் பேசுவோம்'' என்று யோசனை கூறினுன்.

அதற்குக் கர்னல்மாரப்பன், "அதிருக்கட்டும் அவ்வாறே செய்வோம். நமது அன்புள்ள காதலியர் இவ்வளவு நேரமாகியும் ஒன்றும் சொல்லியனுப்பவில்லையே. என்ன சங்கதி'' என்ருன். குமாரவேல், "என் அன்புள்ள ஜானகி தன் சகோதரி இரங்கம்மாளுடன் சென்றபோது அவள் என்னைக் கடைக்கண்ணுல் பார்த்ததை நினைத்தால் கட்டாயம் நமக்கு அவர்களிடமிருந்து ஏதேனும் பதில்வரும் என்றே நான் நிச்சயமாக நம்புகிறேன்'' என்று கூறினுன். அவர்களிருவரும் இவ்வாறு பேசிக்கொண்டே தாங்கள் இறங்கியிருந்த ஓட்டலுக்குச் சென்ருர்கள்.

134 - வது அத்தியாயம்

நேயர்காள்! நமது நாவலின் பகுதிகள் பலவாகப் பிரிந்து பற்பலவிதமான சம்பவங்கள் நேர்வதால் வாசகர்கள் அதைத் தொடர்ந்து கவனித்து வரும் பொருட்டு மிகவும் விளக்கமாகவே எழுதிவருகிறோம். எனினும் நேயர்கள் இதை வாசிக்கும்போது அதிக கவனத்துடன் வாசித்தால் நன்குவிளங்கும். அந்த ஏரிக்கரையிலிருந்து இளவரசியின் மாளிகைக்குத் திரும்பிய மூன்று சகோதரிகள் பிறகு என்னசெய்தார்கள் என்பதைப்பற்றிக் கவனிப்பதற்கு முன்பு நாம் வேறொரு முக்கிய விஷயத்தைக் கவனிக்கவேண்டும். நாம் மேலேகூறியபடி கர்னல் மாரப்பன், குமாரவேல்பிரபு, இரங்கம்மாள், ஜானகி ஆகியவர்கள் அந்த ஏரிக்கரையில் சம்பாஷித்துக்கொண் டிருந்தபோது வேறு இருமாதர்கள் முகமூடியுடன் பழைய துறைமுகக் கட்டடத்துக்குப்பின் மறைவாக நின்றுகொண்டு இதையெல்லாம் கவனித்துக்கொண் டிருந்தார்கள். இவர்கள் யாரென்று கேட்டால் பெரியநாயகிச் சீமாட்டியும், ஏகநாயகிச் சீமாட்டியுமே. குமாரவேல்பிரபுவின் மனைவியாகிய ஏகநாயகிச் சீமாட்டி அங்கே எப்படிவந்தாள் என்று கேட்டால், டாக்டர் மணவாளன் வீட்டில் செல்வாம்பாள் என்னும் பெயருடன் சில தினங்களுக்குமுன் வந்து தங்கியவள் அவளே.

கர்னல் மாரப்பனும் குமாரவேல்பிரபுவும் அந்த ஏரிக்கரையை விட்டுச் சிறிதுதூரம் சென்றபின்னர் அவ்விரு மாதர்களும் தாங்கள் மறைந்திருந்த இடத்திலிருந்து வெளியே

வந்தார்கள். சொற்பதூரம் செல்லும்வரை அவர்களிருவரும் ஒன்றும் பேசாமல் மௌனமாகவே வந்தார்களென்றாலும், அவர்களிருவருமே ஏதோ ஒருவகையான மனக்குழப்பத்தை யும் ஆத்திரத்தையும் அடைந்திருந்தார்கள் என்பதை அவர்க ளுடைய மனது பளிங்குபோல் காட்டிவிட்டது. கடைசியில் பெரியநாயகிச் சீமாட்டி ஒருவாறாக வாய்திறந்து, "ஆ! இது எதிர்பாராத சம்பவம்," என்று கூறினாள். அதற்கு ஏகநாய கிச் சீமாட்டியும், "ஆம்; எதிர்பாராததே. சைத்தான் தானா கவே இவ்வாறு கூட்டி வைத்திருக்கிறது" என்றாள்.

மற்றும் சிறிதுநேரத்துக்குப் பிறகு ஏகநாயகி பெரிய நாயகிச் சீமாட்டியிடம், "நீ யார்மீது வெறுப்புக்கொண்டு யாரைப் பழிவாங்க விரும்புகிறாயோ அவன் உன் கையில் சிக்கிக்கொண்டான்" என்று கூறினாள். அதற்குப் பெரிய நாயகிச் சீமாட்டி, "ஆனால் அந்த மனிதன் உன் கணவன் ஆயிற்றே" என்றாள். அப்போது அசட்டுச் சிரிப்புடன் ஏக நாயகி, "என் கணவனா? அவன் என் நிரந்தரமான விரோதியே யொழியக் கணவனல்ல. நீ அவனைக் கொல்லாவிட்டால் நானே அவ்வேலையைச் செய்துவிடுவேன். அவனா! மிகக் கொடியன். அவன் என்னைப் பழி பாவங்களுக்காளாக்கி என்னை அழித்துவிட்டான் என்றே கூறலாம். ஆ! அன்று ராத்திரி என் மர்மங்களைப் பகிரங்கமாகக் கண்டு பிடித்து விட்டு என் சேவகர்களிடமும் அதைக் கூறிவிட்டான். நான் அவ்விஷயங்களையெல்லாம் முன்னமே உன்னிடம் கூறி யிருக்கிறேனல்லவா?" என்று ஆத்திரத்துடன் கூறினாள்.

அப்போது பெரியநாயகி, "அப்படியானால் நீ உன் கணவனை, நான் என்பழி தீர்த்துக்கொள்ளும்படி விட்டு விடப்போகிறாயா? என்று வினவினாள். அதற்கு ஏகநாயகி மிக்க உறுதியுடன், "ஆம்; அவ்வாறே தீர்மானித்திருக்

கிறேன்'' என்றாள். அதற்குப் பெரியநாயகிச் சீமாட்டி, அப்படியானால் நான் உன் கணவன் குமாரவேல் பிரபுவையும், நீ உன் காதலன், கர்னல் மாரப்பனையும் பழிவாங்கி விடுவதென்பது நிச்சயமாய்விட்டது. அவ்விருவருமே நமது கையில் இப்போது அகப்பட்டிருக்கிறார்கள். ஆதலின் நமது எண்ணப்படியே தீர்த்துவிடுவோம்'' என்று நிச்சயமாகக் கூறினாள்.

அதற்கு ஏகநாயகி, ''ஆம்; அப்படித்தான் செய்யவேண்டும். கர்னல் மாரப்பன் என் காதலன் என்றுகூறினாய். அவன் என் பரம சத்துரு. அவன்தான் என் விஷயங்களையெல்லாம் என் கணவனிடம் சிறிதும் வெட்கமில்லாமல் சொல்லிவிட்டான். ஒருகாலத்தில் உண்மையிலேயே நான் மாரப்பனிடம் அளவிலாக் காதல்கொண்டிருந்தேன். ஆனால் அவன்தான் என் இரகசியங்களையெல்லாம் குமாரவேல் பிரபுவிடம்சொல்லி அவன் என்னை, உலகநாயகி என்னும் உலகாம்பாள் வீட்டில், நான் என் கள்ளக் காதலன் செல்லப்பப் பிரபுவுடன் இருக்கும்போது கண்டுபிடித்து விடும்படி செய்தான். ஆகையால் அவன் சாகவேண்டியதே. இப்போது அவன் என்கையில் சிக்கியிருப்பதால் அவனைத் தீர்த்துவிடுவது நிச்சயம்'' என்றாள்.

அவள் இவ்வாறு கூறிமுடித்ததும் இரண்டொரு நிமிஷங்கள் வரை ஒன்றும்பேசாமல் மௌனமாய் இருந்தாள். அப்போது பெரியநாயகியும் இப்பயங்கரமான முடிவைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டே சிறிதுநேரம் மௌனம்சாதித்தாள். எனினும் சிறிது நேரத்துக்குப் பிறகு ஏகநாயகிச் சீமாட்டி பின்வருமாறு கூறினாள். ''ஏதோ ஒரு சக்தி நம்மை இவ்வாறெல்லாம் நடத்துகிறதென்பதில் ஆட்சேபமில்லை. நாம் அவ்விரு அயோக்கியர்களையும் கொன்றுவிட வேண்டுமெனப் பல

நாட்களாக யோசிக்கிறேமென்றாலும் இவ்வளவு விரைவில் காரியம் முடியப்போகிறதென்பதை நாம் அறியமாட்டோம். நான் வெட்கத்தாலும் அவமானத்தாலும் இரத்தினபுரியை விட்டு ஓடிப்போக நினைத்தபோது வேறு எங்கேனும் சென்றிருக்கலாகாதா? இதே பரிதிபுரத்துக்கு வரவேண்டுமென்னும் எண்ணம் என் உள்ளத்தில் உதித்ததற்கே ஏதோ தக்க காரணம் இருக்கவேண்டும்?

அதைக்கேட்ட பெரியநாயகிச் சீமாட்டி, "ஆம்; அவ்விரு ஆடவர்களையும் நாம் இப்போது இங்கே இவ்விதமாகக் காண்போமென்று யாரும் நினைக்கவேயில்லை. எனினும் நான் இப்போது உன் கணவனைக் கண்டதும் அவன் உன் கணவனை குமாரவேல்பிரபு தான் என்று சொன்னபோது நீ நம்பவில்லை யல்லவா? அவனுடைய அழகிய கம்பீரமான நடையைக்கொண்டே அவன் குமாரவேல் பிரபுதானென்று நான் அறிந்துகொண்டு விட்டேன்" என்றாள். பெரியநாயகிச் சீமாட்டி இவ்வாறு குமாரவேலின் அழகிய நடையைப்பற்றி வருணிக்கத் தொடங்கியதும் அவனுடைய மனைவியான ஏகநாயகிக்கு அது கர்ணகடூரமா யிருந்தது. உடனே அவள், "நீ குமாரவேல் பிரபுவை அடியோடு வெறுத்துவிட்டதாகவும் எப்படியாவது கொன்றுவிடுவதே சரி என்றும் நிச்சயித்து விட்டு இப்போது இவ்வாறு அவனைப்பற்றிப் புகழ ஆரம்பிப்பது தவறு" என்று கூறினாள்.

அதைக்கேட்ட பெரியநாயகிச் சீமாட்டி தன் பலஹீனத்தை உணர்ந்துகொண்டு அதற்காக வருத்தப்பட்டு ஏதோ மனக்குழப்பத்தால் அவ்வாறு கூறுவதாகவும், பழி வாங்குவதுமட்டும் நிச்சயமென்றும் கூறினாள். மேலும் அவள் தன் காதலனாயிருந்த குமாரவேல் மற்றொரு பெண்ணாகிய ஜானகியையும், கைபிடித்துப் பேசியதையும் கண்டதால் அவளுக்கு வெறுப்பு இன்னும் அதிகரித்துவிட்டது.

186556
சென்னை-600 008

மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினி"ச் சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922ஆம் பிப்ரவரிமீ 1உ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக்கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்கு முன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட **"அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச் சோலையின் அற்புதக் கோலை" "கடற்கொள்ளைக்காரன்" "இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" 'இரத்தினாபாய் அல்லது இரகசிய சங்கம்" 'சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி" இரத்தினபுரி இரகசியம் 3-ம், 4-ம் பாகம்** நாவல்கள் முடிவுபெற்று இப்பொழுது **இரத்தினபுரி ரகசியம் 5-ம்பாகம்** என்கிற நாவல் **ஆ**ரம்பமாகி நடந்துவருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ளவேண்டும் ; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. **இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங்கொண்டது.** அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0

வெளி நாட்டிற்கு ,, 3—0—0

இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.

அமராவதி 2 பாகமும்	ரூ.	4	0	
பவளத்தீவு 2 பாகமும்	ரூ.	3	0	
ஞானசெல்வாம்பாள் 5 பாகமும்	ரூ.	9	10	0
அர்ஜுனஸிங், சுந்தர்	,,	0	2	0
அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்		1	12	0
கற்பகச்சோலையின் அற்புதக்கொலை	ரூ.	1	4	0
கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும்	,,	3	4	0
இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்	,,	2	0	0
இரத்தினாபாய் அல்லது இரகசிய சங்கம்	,,	1	12	0
சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி	,,	2	0	0

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

"ஆனந்தபோதினி"

ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915ஹு ஜூலைமீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகீக ஆசார ஒழுக்கங்களின் சீர் திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானாபிவிர்த்தியையும், பெண்கல்வியையும் நோக்கமாய்க்கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதி சஞ்சிகையிலும் மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப்பட்ட மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத் தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில் 80 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற் கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-8-0 மாதிரிக்காப்பி இனாம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

	ரூ.	அ.		ரூபா	
இரத்தினபுரி இரகசியம்			தினகரசுந்தரி	1	0
4-பாகமும் ...	8	4	தபால்கொள்ளைக்காரர்	0	14
பவளத்தீவு 2-பாகமும் ...	3	0	ரத்தினபாய் ...	1	12
கற்கோட்டை ...	2	0	வீரநாதன் ...	0	12
மின்சார மாயவன் ...	1	8	குணசுந்தரன் ...	0	12
தேவசுந்தரி ...	1	4	மஞ்சள் அறையின் மர்மம்	1	8
கனகபூஷணம் 2 பாகம் ...	3	8	கமலசேகரன் ...	1	12
இராஜாமணி ...	2	0	பூங்கோதை ...	0	10
ஆனந்தவிங் ...	2	0	இந்திராபாய் ...	2	8
மதனபூஷணம் ...	1	0	அமராவதி 2 பாகமும்	4	0
ஞானசெல்வாம்பாள்			மதனாம்பாள் 2 பாகமும்	3	0
5 பாகமும் ...	9	10	லோகநாயகி	1	0

விலாசம் : மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
6. லாயர் சின்னதம்பி முதலி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்.